158

விலை 0—1—3 "UDAYAM" Weekly. Reg. No.

# உதயம்

10 OCT 1946

வார வெளியீடு. ஆசிரியர் :— M. கந்தசாமி

| மலர் 1 | திருவத்திபுரம் 22—9—46 வியஜ புரட்டாசி 6௳ ஞாயிறு | இதழ் 8 |
|---|---|---|

# 6 கோடி மக்களும் அடிமை! அடிமை!!

## இக் கொடுமை ஒழிக்கப்பட வேண்டாமா?

இந்தியா என்று சொல்லப்படும் இவ்வுப கண்டத்தில், அரசியல், பொருளாதாரம், சமுதாயம், கல்வி ஆகிய எல்லாத் துறைகளிலும், தாழ்த்தப்பட்டு ஒடுக்கப்பட்டு, அடக்கப்பட்டு, உண்மையிலே நாயினும் கேடாய் 6 கோடிக்குமேல் தாழ்த்தப்பட்டோர் என்று சொல்லப்படும் சமூகம் உழல்வதை யாராலும் மறுக்க முடியாது.

என்று இவ்வுப கண்டத்தில் ஆரிய மதமாகிய இந்து மதம் தோன்றியதோ அன்று முதல் இச் சமூகத்தார் உழன்று வருகின்றார்கள்.

இச் சமூகத்தாரும் தங்களை இந்துக்கள் என்று சொல்லிக்கொண்டு வருவதினாலேயும், இந்துக்களின் தயவை நாடிநிற்பதினாலும் இவ்விழி நிலையிலிருந்து வருகிறார்களே யல்லாது, தன்னம்பிக்கையும் தளராத உறுதியும், கட்டுப்பாடும் இருந்திருக்குமேயானால் இவ்வடிமை வாழ்விலிருந்து விடுதலையடைந்திருக்க முடியும்.

இவர்களைவிட மோசமான நிலையில் உலகில் வேறு கண்டங்களிலிருந்து வந்த மக்கள், தங்கள் அடிமை வாழ்விலிருந்து விடுதலையடைந்து சுதந்திரம் பெற்று சுயமரியாதையுடன் வாழ்வதை நாம் கண்டும் கேட்டும் வருகிறோம்.

இந் நாட்டில் தாழ்த்தப்பட்ட சமூகத்தார் தன்மான உணர்வுபெற்று சுதந்திரக் கிளர்ச்சி செய்யத் தொடங்கினால் ஜாதி இந்துக்கள் என்று சொல்லப்படும் சுய நலக்கூட்டாத்தார் இச் சமூகத்தை என்றென்றும் தாழ்த்தி அடிமைப்படுத்தி வைத்திருக்க வேண்டுமென்று கருதுகிற கூட்டத்தார், மதத்தின் பேராலும் அரசியலின் பேராலும் சீர்திருத்தம் பேசி, இவர்களின் உணர்ச்சியைத் தடுத்து வந்திருக்கிறார்கள். அடியார்களாகவும் ஆழ்வார்களாகவும் ஆக்கி வந்திருக்கிறார்கள். இது மதத்தின் பெயரால் இப்பொழுது அரசியலின் பெயரால் 'ஹரிஜனங்கள்' என்ற பெயரைச் சூட்டி ஏதோதோ சலுகைகள் தருவதாக ஆசை வார்த்தைகளைச சொல்லி அடக்கி வருகிறார்கள்.



டாக்டர். அம்பேத்கார்.

இச் சமூகத்தார், தங்கள் அடிமை வாழ்விலிருந்து முதலில் விடுதலையடைய வழி என்ன என்பதை முதலில் அறிந்து அதன்படி போராடி தங்கள் உரிமையைப் பெற்றாலொழிய இச் சமூகத்திற்கு விமோசனமில்லை. இவர்கள் சாதி இந்துக்களை நம்பியிருக்கிற வரையில் இவர்கள் ஒருநாளும் விடுதலையோ சுதந்திரமோ பெறமுடியாது என்று உறுதியாகக் கூறுவோம். பாட்டாளி மக்கள், தொழிலாளி மக்கள், முதலாளி வர்க்கத்தை நம்பியிருக்கிறவரை எந்த நாட்டிலாவது விடுதலையடைந்து சுதந்திரம் பெற்றதாக சரித்திரம் சாற்றுகிறதா? காண முடியுமா? கேள்விப்பட்டிருக்கிறோமா?

எனவே, இவர்கள் தங்கள் காலில் நின்று தாங்களே பாடுபட முன்வராத வரை ஒரு நாளும் முன்னேற முடியாது."

"இதுவரையிலும் பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக இந்துக்களின் தயவை எதிர்பார்த்து வாழ்ந்துவந்த தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு அவர்கள் செய்த நன்மையென்ன?

தாழ்த்தப்பட்டவர்களைக் கல்வி கற்க அனுமதிக்காமலும், நல்ல உடை உடுத்த அனுமதிக்காமலும், கிணறு குளங்களில் தண்ணீர் எடுக்க அனுமதிக்காமலும் செய்ததுதான் கிடைத்த பலன்.

இந்துக்களின் தயவை எதிர்பார்த்துக்கொண்டும், தங்களையும் இந்துக்கள் என்று நினைத்துக்கொண்டும் இருக்கும் வரையிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விமோசனமே உண்டாகப் போவதில்லை என்று கோபுரத்தின் மேல் நின்றும் கூறுவோம்."

என்று "குடி அரசு" 1932ல் கூறியிருப்பதையும் தாழ்த்தப்பட்டத் தோழர்களின் கவனத்திற்குக்கொண்டு வருகின்றோம்.

தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வி, பொருளாதாரம் ஆகிய துறைகளில் முன்னேற்றமடையாதவரையில், தன்மானத்துடன் வாழ முடியாது, தங்கள் இழிவைப் போக்கிக் கொள்ள முடியாது. இதற்கு உதாரணமாக காலஞ்சென்ற 'சர் கே வி. ரெட்டி அவர்கள் அன்றொரு நாள் கூறியிருப்பதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். அதாவது,

"தென்னாப்பிரிக்காவில் நான் சென்று தொண்டாற்றி வந்த காலத்தில் அங்கு தாழ்த்தப்பட்டாரிருந்த நிலையைச் சிறிது விளக்குகிறேன்.

இந்தியாவிலிருப்பதைப் போலவே, அங்கும் தாழ்த்தப்பட்டார் கஷ்டங்கள் பல உண்டு.

ஜாதி இந்துக்கள் என்னும் சுயநலவாதிகள் அங்கு உங்களினத்தாருக்கு (தாழ்த்தப்பட்டவர்களுக்கு) செய்து வந்தகொடுமை அளவிடற்பாலன. ஆயினும் இந்தியாவில் தாழ்த்தப்பட்டார் பெற்றிருக்கும் உரிமைகளைக் காட்டிலும் அங்குள்ள உங்கள் சகோதரர்கள் அதிகம் பெற்றிருக்கின்றனர்.

இங்கு தாழ்த்தப்பட்டார் எனக் கூறும் உங்கள் வகுப்பில் பிறந்து ஆப்பிரிக்கா சென்ற வியாபாரத்தாலும், செல்வத்தாலும் உயர்ந்த பின்னர் சாதி இந்துக்களின் பெண்களை மணஞ் செய்து கொண்டிருக்கின்றனர்.

இத்தகைய பலரை எனக்குத் தெரியும்.

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்.

## பாய்ந்தது புலி

(ம. சோ. சுப்ரமணியன் திருவத்திபுரம்)

ஒரு ஊரில் ஜமீன்தார் ஒருவர் இருந்தார். அவருக்கு புலிவேட்டையில் அமோகப் பிரியம் உண்டு. அவர் அனேகப் புலிகளை வேட்டையாடி அவைகளின் தோலினுள் வைக்கோலை அடைத்து அரண்மனையில் எல்லா இடங்களிலும் வைத்திருந்தார்.

ஒரு நாள் ஜமீன்தாரின் வேலைக்காரன் வழக்கம்போல் புலிப்பொம்மைகளைத் துடைத்து வைப்பதற்காக 'ஹாலு'க்குள் வந்தான். அதசமயம் 'உர்' என்று அருகில் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தானோ இல்லையோ அவன் உடம்பு அப்படியே தூக்கி வாரிப் போட்டது. ஏனெனில் அவன் எதிரில் ஒரு நிஜப்புலி வந்து கொண்டு இருந்தது. 'ஐயோபுலி!' என்று தன்னையறியாமல் கூச்சல்போட்டுக் கொண்டே வெளியே ஓடிவந்து கதவைத் தாழ்ப்பாள் போட்டான். ஆனால் இம்மாதிரி கூச்சல்கேட்பது தான் வீட்டில் உள்ளவர்களுக்கு சகஜமாயிற்றே? ஏனென்றால் புலிப்பொம்மைகளைக் கண்டே அனேகர் கூச்சலிட்டதுண்டு. அதனால் யாரும் அந்த வேலைக்காரன் போட்ட கூச்சலை காதில் போடவில்லை.

ஆனால் சில நிமிஷங்களில் வேறொரு சத்தத்தைக் கேட்டு எல்லோரும் ஹாலைப் பார்க்க ஓட்டமாக ஓடிவரும்படியாகி விட்டது, அதுதான் புலியின் உறுமல் சத்தம். எல்லாரும் ஓடிவந்து ஜன்னல் வழியாக நிஜப்புலி ஒன்று உறுமிக்கொண்டு அங்குமிங்கும் உலாவுவதைப் பார்த்துத் திடுக்கிட்டுப் போனார்கள். வாஸ்தவமாகவே புலிப்பொம்மைக்கு உயிர் வந்து விட்டதா? என்று யோசித்துப் பார்த்ததும், இத்தனை நாளாய் எஜமானன் குண்டுக்கு அகப்படாமல்பக்கத்துக் காட்டில் தலைமறைவாயிருந்து வந்த புலிதான் அங்கே வந்திருக்கிறதென்று தெரிந்தது.

இதற்குள் அந்தப்புலி திறந்திருந்த இடைக்கட்டுக் கதவின் வழியாகப் பக்கத்திலிருந்த அறை ஒன்றுக்குள் போய்விட்டது! அந்த அறையில் ஜமீன்தார் ஏதோ புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தார். புலியின் உறுமலையும் வேலைக்காரர்களின் கூக்குரல்களையும் பொருட் படுத்தாமல் கல்லுப் பிள்ளையாரைப்போல் ஜமீன்தார் உட்கார்ந்திருந்தார்.

"எஜமான்! எஜமான்!" என்று கூச்சலிட்டுக் கூப்பிட்டார்கள் வேலைக்காரர்கள். ஆனால் அதற்குள் புலி ஜமீன்தாரின் மீது பாய்ந்து விட்டது. ஆனால் ஜமீன்தார் கொஞ்சம் கூட அதைச் சட்டை செய்ய வில்லை. துளிக்கூட அசைய வில்லை. பாய்ந்த புலி ஜமீன்தார் மீது மோதுண்டு கீழே விழுந்தது. அப்பொழுது அதன் தலையில் பலமான காயம் பட்டு இரத்தம் பெருகி ஓடிற்று.

"பேஷ்! ரொம்ப நன்றாய்ச் செய்திருக்கிறான்! குப்புசாமியின் பிள்ளை அப்பாசாமி செய்த சிலை என்றால் அழுத்தத்தக்கும் உறுதிக்கும் கேட்கவா வேண்டும்.

நான் தான் புலிகளுக்கு எமனாக இருக்கிறேன் என்றால் என் சிலைகூட அப்படித்தான் இருக்கிறது" என்று பின்னால் நின்று கொண்டிருந்த ஜமீன்தார் கூறியபடியே ஒரு வேட்டை தீர்த்தார் புலியின் மீது. இதையெல்லாம் பார்த்த வேலைக் காரர்களும் கற்சிலையாய் நின்றார்கள்.

## நீ யார்?

(மா. வே. மாணிக்கவாசகன், காஞ்சி)

**திருமதி கண்ணாம்பா நடித்த கண்ணகி** படத்தை எங்களூர் வெண்திரையில் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்படத்தில் கவுந்தி அடிகள் கோவலன் கண்ணகியுடன் மதுரம்பதியம்பதியை நாடி ஓர் இடத்தில் வைகையைக் கடக்கின்றனர் அவ்வோடத்தைச் செலுத்துபவனையும் அவன் கருவியையும் கண்டு அடிகள் கூறிய உரைகள் பின் வருமாறு:—

"மகளே! நாம் கடந்து செல்லும் இவ்வைகையாறு ஆறென்று நினைக்காதே. பிறவியாகிய ஒரு பெருங்கடல். இக்கடலைக் கடக்கும் போது வழியில் நேரும் அலை, புயல், மணற்பாறை முதலியன நம் வாழ்க்கையில் நேரும் துன்பங்கள், இவைகளை யெல்லாம் கடந்து செல்ல தோணியிருக்கிறதல்லவா அது தோணியல்ல: மனம் அத்தோணியை ஓட்டும் துடுப்பே, நம் அறிவு மனம் என்ற தோணியைப் பற்றி அறிவு என்ற துடுப்பால் பிறவியாகிய இவ்வுலக வாழ்க்கையைக் கடந்தால் கடவுளின் பேரானந்தம் அடையலாம். ஆதலால் அந்தப் பேரின்பத்தை அடைய வழியில் உண்டாகும் துன்பங்கள் பல. கடவுள் எங்கும் நிறைந்துள்ளார் எல்லாரிடத்திலும் அக்கடவுள் இருக்கிறார். சிந்தித்துப்பார் நீயார்? நான் ஆர்? எல்லாம் ஆண்டவன் படைப்புக்களே அவனில்லாமல் ஓர் அணுவும் அசையாது என்று இவ்வாறெல்லாம் கூறி அவர்களைத் திகைக்கவைத்து விட்டார். வாழ்க்கையை இன்னதென்றறியாத கண்ணகி மதிமயங்கினாள்

வாசகர்களே! இதைச்சற்று சிந்தித்துப் பாருங்கள். உலக வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள நம்போன்றோருக்கு நீயார்? நான் ஆர்? என்ற வேதாந்தம் எதற்கு? வேதாந்தம் பேசிப்பேசி நம் வாழ்நாட்களை வீணாட்களாகக் கழித்து மதியிழந்து விட்டோமே! மேல் நாட்டு அறிஞர்கள் இத்தகைய, வேதாந்த விஷயங்களில் தம் அறிவைச் செலுத்தாமல் உலகியற்கையின் இயல்பை யறிந்து அதுமக்கள் வாழ்க்கைக்கு எவ்வாறு பயன் படுகிறது என்று ஆராய்ந்து பலன் அடைகிறதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். மேனாட்டார் இயற்கையில் கிடைக்கும் மின்சாரத்தைக் கண்டு பிடித்துப் பல நன்மைகளை நமக்குத் தந்திருக்கிறார்கள். மாலை நேரத்தில் வீசும் சூரிய ஒளியினை ஆராய்ந்து அதனால் பல நோய்களைத் தீர்க்கும் முறைகளைக்கண்டு உலகிற்கு 'Radium Treatment' உதவினார்கள்.

இன்னும் இது போன்ற பல ஆராய்ச்சிகளில் இன்றும் இறங்கிவருகிறார்கள். இந்த வேளையில் இத்தகைய வேதாந்தம் பேசித்திரிவதா நாம் என்பதை யோசித்துப் பாருங்கள்.

## அனுதாபம்

1946 வருஷம் செப்டம்பர் மாதம் 8 தேதி ஞாயிற்றுக்கிழமை நம் கழக தலைவர் திரு. V. S. கிருஷ்ணசாமி அவர்களுடைய தாயார் **குப்பம்மாள்** இயற்கை எய்தினர். அவருடைய குடும்பத்திற்கு நம் கழக சார்பில் தாழ்மையான அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம். வினை வாழ்குடை திராவிடர் கழகத்தார் தெரிவிக்கின்றனர்.

## விஜயாள்

சென்ற வாரத் தொடர்ச்சி

மற்றும் ஒரு புறம், சர்ஜ், டுவீட், சில்க் மேனாடு உடைகளை அணிந்தபெருங்கூட்டமும் அங்கு கூடியிருந்தது என்றால் அது R. K. பிள்ளைக்கும், விஜயாளுக்கும் நடக்கும் திருமண நாள் அது என்று வாசகர்களுக்கு நாம் சொல்லாமலேயே விளங்கி இருக்கும்.

அழகிய முத்துப் பந்தலில் இரு பக்கமும் அன்னகுத்து விளக்கும் சுற்றிலும் மின்சார விளக்கும், அமைந்த திருமண பந்தலில் மணமகள் விஜயா ஓர் புறமும், மணமகன் R. K. பிள்ளையும் மறு புறமும் அமர்ந்து இருந்தனர். பக்கத்தில் புரோகிதனுட்கார்ந்து எதிரிலே எரியும் கட்டையிலே நெய்யை ஊற்றிக்கொண்டு எதையோ சொல்லி விஜயா கழுத்தில் தாலியைக் கட்டச் சொன்னான். பிள்ளையும் தாலியை விஜயாளுக்கு கட்டினார். ஏற்கனவே பிள்ளையின் அழகைக்காண முயற்சித்துக் கொண்டிருந்த விஜயா, பிள்ளையின் அழகைக் கண்டாள், திடுக்கிட்டாள். மறுபடியும் பார்த்தாள், பிரமித்தாள். மீண்டும் நோக்கினாள். கலங்கினாள். காரணம், பிள்ளையின கிழமுகம். எப்படியோ பிள்ளை தாலியை விஜயாளுக்கு கட்டிவிட்டார். இனி அவள் அவர் மனைவி, அவள் என்ன நியாயம் சொன்னாலும் சமூகம் அதை ஏற்காது. பயித்தியக்காரி! பிள்ளையின் அந்தஸ்தையும், ஆஸ்தியையும் ஆராய்ந்தாளே அன்றி அங்கத்தை அறிந்தாள் இல்லை. கிழவர், தாசில்தார்; லக்ஷாதிபதி R. K. பிள்ளையின் மனைவி யுவதி; அழகி; ஏழை விஜயா என்பதை நினைந்து நினைந்து மூர்ச்சையானாள். அதற்குக்காரணம் ஏதோ தெய்வ குற்றம் என்று கப்பணம் கட்டி கடவுளுக்கு பிரார்த்தனை செய்து கொண்டார்.

மறுநாள் முதல் பல உயர்தர உத்யோகஸ்தர் பிள்ளை வீட்டிற்கு வரலாயினர். விஜயாளும் அவர்களுடன் தாராளமாய் பழகவும், பேசவும் பிள்ளை உரிமைதந்து இருந்தார். இப்படியாக மாதம் பல ஓடின. அதற்குள் விஜயாளின் கருத்தை கவர்ந்தது. ஓர் பொருள், அது சப் கலெக்டர் பரமேஸ்வரன். பரமேஸ்வரனின் பரந்த முகமும், அகன்ற மார்பும் உயர்ந்த உருவமும் விஜயாளின் கிழவருக்கு வாழ்க்கைபட்டசுகம் அனுபவிக்க வேண்டியவள் சுகம் தரும் பொருளை அடைந்தும் சுகமடையாத விஜயாளின் உள்ளத்தை கொள்ளை கொண்டது ஆச்சரியமில்லை. அடுத்த சில மாதங்களின் பரமேஸ்வரனும், விஜயாளும் அத்யந்த நண்பர்களாயினர். கன்னிமாரா, பசோட்டா, போன்ற ஹோட்டல்களிலும், நீயுக்ளோப், கேசினோ முதலிய படகாட்சி சாலைகளிலும் விஜயாளையும், பரமேஸ்வரனையும் காணலாம்: இது பிள்ளை அறியாமல் இல்லை. அப்படி அறிந்தும் பரமேஸ்வரன் கலெக்டர் என்றதாலும், தனக்கும் விஜயாளுக்கும் உள்ள பொருத்தத்தை சிந்தித்தும் வீணே இருந்தார். ஆயினும் விஜயாளின் நடத்தையின் உயர்வையும், தன் கௌரவத்திற்கு அழிவு ஏற்படுமோ என்று எண்ணி எண்ணி அதே வியாதி ஆகி படுக்கையில் படுத்து விட்டார்.

ஓர் நாள் மாலை விஜயாளும், பரமேஸ்வரனும் காரில் பசோட்டா வாசலில் வந்து இறங்கினர். பின்னாலேயேஓர்டாக்ஸியில்கேப்டன் ஒருவன்வந்து இறங்கினான். அவன் உருவத்தை விஜயாள்கண்கள் நோக்கின. அதே நேரத்தில் விஜயாளை கேப்டன் பார்த்தான். அடுத்த சில நிமிடங்கள் ஒருவரை ஒருவர் எங்கோ பார்த்தாற்போல் இருக்கு என்று யோசித்தனர். அந்த கேப்டன் விஜயாளின் முதல் காதலன் நடராஜன்தான். ஆனாலும் நடராஜனை விஜயா அறிந்து கொள்ளாமல் போனது நடராஜன் பழைய நடராஜனைப்போல் இல்லாமல், நன்கு பருத்தும், கருத்தும் இருந்தது தான். நடராஜன் விஜயாளை அறிந்துகொள்ளாமல் போனது விஜயா அணிந்து இருந்த நகைகளும், ஆடையும், அவள் மேனியை மாற்றி இருந்த, கூனே வகைகளும் தான். பரமேஸ்வரனும், விஜயாளும் ஓர் மேஜை முன் உட்கார்ந்தனர் நடராஜன் அதற்கடுத்த மேஜை முன் உட்கார்ந்தான். மேலும் விஜயாளின் பார்வை நடராஜன் மேலேயே இருந்ததால்; நடராஜன் தைரியமாய் விஜயா உட்கார்ந்து இருந்த மேஜை முன் உட்கார்ந்து தங்களை எங்கோ பார்த்தாற்போல் இருக்கிறதே என்றான் ஆங்கிலத்தில். என்னையா? நான் தாசில்தார் R. K. பிள்ளையின் மனைவி என்றாள் விஜயா ஆங்கிலத்திலேயே.

தாசில்தார்: R. K. பிள்ளையா?........உங்கள் பெயர்?

ஆம், என் பெயர் விஜயராணி.
யார் கணபதி பெண்....ணு?
ஆமாம். தாங்கள் யார்?
நான் சரவணப் பிள்ளை மகன், நடராஜன்.

ஆ! நடராஜனா, நடராஜ்! என்று அவன் கைகளை பற்றி குலுக்கினாள். பரமேஸ்வரனை, நடராஜன் யார் என்று கேட்க, அவன் என் கணவனின் நண்பன் என்று அலட்சியமாய் சொல்லிவிட்டு மேலும் அவனுடன் அளவளாவி பேசிக்கொண்டிருந்தாள். இதைக் கண்ட பரமேஸ்வரனின் கண்க

இதன் தொடர்ச்சி 7ம் பக்கம்

## போர் முழக்கம்

(மாணவன் மு. பே. கண்ணன்)

உலகில் பலபாகங்களில் நாச காரியத்தைச் செய்த நய வஞ்சகர்களின் கூட்டத்தை அழிக்க, கொடுங்கோலோச்சிய கொற்றவனை அழிக்க, அரசர்கள் ஆண்டவன் பிரதிநிதிகள் என்றுகூறி அக்ரகார ஆட்சி நடாத்திய மன்னரின் மணி முடியை வீழ்த்த புரட்சி வீரர்கள் மிரட்சி கொள்ளாமல் மிடுக்குடன் போர் முழக்கம் (War Sound) செய்தனர் என்று வரலாற்று ஏட்டிலே காண்கிறோம்.

போர் முழக்கம் அரசனை வீழ்த்த மட்டுமல்ல, சமுதாயத்தை திருத்தி அமைக்க, மூட நம்பிக்கைகளை ஒழிக்க கலையில் புரட்சிகாண, உண்மையை வெளிப்படுத்த, நாட்டிலே உள்ள நலிவைப்போக்க, உழைப்புக்கேற்ற ஊதியம், தேவைக்கேற்ற வசதி என்றறிய நியதியை நிலைநாட்ட, வெள்ளையன், வடநாட்டான், ஆரியன் ஆகிய மூன்று கூட்டுதாரர்களையும் ஒழிக்க நாம் இன்று போர் முழக்கம் செய்கிறோம்.

வற்றாத உள்ளம் படைத்த புரட்சி வீரர்கள் வேதனை பல அனுபவித்தனர் தம்முடைய இலட்சியத்திற்காக கடவுளை எபோதியாக, காமப்பித்தனுக ஆக்காதீர்கள் என்று நவின்ற சாக்ரடீசுக்கு நஞ்சு கொடுத்து நமனுக்கு அளிப்பினர்.

நாட்டு மக்களின் அறியாமை அடியோடு மாறிவிடவில்லை என்ற பயத்திற்காகப் பகுத்தறிவாளர்கள், தமது பணியை நிறுத்திக்கொள்ள மாட்டார்கள் என்ற எண்ணம் நாட்டிலே வேரூன்றிவிட்டது. அறிவுத் துறைக்கு, அறிஞர்களின் உறுதியே தியாகிகளின் இரத்தமே அபிஷேகம் செய்யப்பட்டது. கடவுளின் லீலைகளைப்பற்றியபேச்சிலே ஈடுபட்டிருந்த மக்கள், பகுத்தறிவாளர்கள் இரத்தம் சிந்தியதைபபற்றியும், போர் முழக்கம் நடத்த வேண்டிய அவசியத்தைப்பற்றியும் பேசத்தொடங்கினர், மணி முடிதரித்த மன்னரையும், மதயானை அடக்கும் மாவீரனையும் வணங்க வைத்து, அரசு செலுத்திய எத்தனையோ "சாமிகள்" இதுபோது மேலை நாடுகளிலே மாஜிக் கடவுள்களாகி விட்டன போர்முழக்கத்தின் விளைவால்.

* * *

1215-ஆம் ஆண்டில் அரசனுடைய பலத்தை குறைக்கும் நோக்கத்தோடு மக்கள் ஜான் என்ற அரசனை ஒரு சாசனத்தை (Magna carta) ஒப்புக்கொள்ளும்படி செய்தனர்.

முதலாம் சார்லஸ் பணம் சேகரிக்க குடிகளின்மேல் டன்னெஜ், பௌண்டேஜ் வரிகளைப் போட்டான். கடன் கேட்டு, கொடுக்க மறுத்தவர்களை தண்டித்தான்.

இதன் விளைவால் மக்களின் மனக்கொதிப்பு ஒருபுறம்; பெருத்த கூக்குரல் பிறிதோர் புறம். மற்றோர் புறம் அரசனை எதிர்க்கும் ஆர்ப்பரிப்பு!

அரசனை எதிர்ப்பவர்களை உடனுக்குடனேயே தண்டிக்கும் இராணுவச் சட்டத்தை (Martial law) அமுலுக்குக் கொண்டுவந்தான் அரசன்.

சட்டத்தை மீறி சிறை சென்றனர் பலர். பிறகு விடுதலை. விடுதலை அடைந்தவர்கள் அரசின் அக்ரம முறையை கண்டித்தும், அதிகாரங்களைக் கட்டுப்படுத்தியும் 1628ல் ஒரு தீர்மானம் பார்லிமெண்டில் நிறைவேற்றினர். இதற்கு உரிமை விண்ணப்பம் (Petition of Right) என்று பெயர். போர் முழக்கம் செய்து கோமானை எதிர்த்தனர்; கோரிய பலன் கிட்டிற்று.

மேல் நாட்டிலே மக்கள் தன் மானத்தோடு வாழ, மிருகத்தனத்தி லிருந்து மீள, சமத்துவத்தோடு வாழ புரட்சி வீரர்கள் 12ம் நூற்றாண்டிலேயே போர் முழக்கம் செய்ய ஆரம்பித்தனர்.

அதனால்தான் இன்று அங்கே மனிதன் மனிதனாக வாழ முடிகிறது. அதனால்தான் அவர்களின் விஞ்ஞான அறிவு அந்தக் காலத்து கிருஷ்ணன், சிவன் செய்யாததை இன்று சாதாரண ஆத்மாக்கள் செய்கின்றன. அதனால் தான் அவர்கள் இன்று இறந்தவனை கூட எழுப்பும் ஆற்றல் பெற்றனர். இங்கோ களிமண்ணும் கையுமாக எத்தனைபேர் சென்ற கிழமையிலே! கையிலே மட்டுமா களிமண்......கூட.

பிரகாசம் காரு ஆட்சி காலம் வரையிலே இருக்கின்றது. மனிதன் மனிதனாக வாழ வேண்டுமென்று ஆசை கொள்ளும் அத்தனை பேரும் நியாயமா என்று கேட்கின்றனர்.

## சிலைக் கடவுள்

காலைமாலை நாள் முழுதும் சுடும்
கனலில்வாடி கருகருத்து
காலை வீதி தானெங்கும் ஒரு
சலன மற்று வீற்றிருக்கும் கற்சிலையே!

ஆக்கல் அளித்தல் இவ்வருஞ்செயலில் மெய்
அலுசாது இங்கு வதிந்தனையோ?
மாக்கள் செய்யும் தொந்தரவுகள் உண்மையொரு
மௌனி யாக்கினவோ? கற்சிலையே!

உண்ண உணவின்றி உயிர்களநேகம் பெரும்
இன்னல்கள் பெற்று இளைத்துவாட
கன்னற்சுவை பாகும் தேனும் உம்பீது
கவிழ்த்து கொட்டுவதேன்? கற்சிலையே!

பெய்யும் கோர மழைக் காற்றில் மக்கள்
உள்ள வகையறியாது உளந்துடிக்க
துய்யப் பட்டு பீத்தாம்பரங்களினால் வீணுக்குன்
மெய்யை அலங்கரிப்பதேன்? கற்சிலையே!

வெள்ளையுள்ள மக்களிடை வந்து
வித்தைகள் செய்வதில் நியாயமில்லை
கொள்ளை வர்க்கத் தொகுதியினில் வைத்து
கூட்டிப் பேசுவோம் கற்சிலையே!

இன்னும் வாய் பேசா மௌனியாக சும்மா
இருந்திடில் இனியுமக்கு சுகமில்லை
பொன்னும் வெள்ளையும் வழங்கிடுவோம் உம்மிரு
கண் திறந்து பேசிடில் கற்சிலையே!

பி. வி. வேணுகானன்.

## திருமணம்

பட்டுக்கோட்டை, மேலத் தெரு தோழர் V. நடேசன் சகோதரி நீலா தேவி அம்மையாருக்கும், நாகை தோழர் வைத்திலிங்கம் பிள்ளை குமாரன் தோழர் சுந்தாராசனுக்கும், மாயவரம் தாலுக்கா நடுத்திட்டில் 8—9—46 ஞாயற்றுக்கிழமை N. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் திராவிட சீர்திருத்த திருமணம் நடந்தது. மற்றத் தோழர்களும் அவ்வமயம் தலைவர் அவர்களும் சீர்திருத்த திருமணம் என்பதைபற்றி பேசினார்கள்.

## விதவையின் வேண்டுதல்

(பே. நல்லசாமி)

எத்தனைநாள் இயற்கையுடன் போர் [தொடுப்பேன்
எத்தனைநாள் சமுதாயத் தீச்சகிப் [பேன்?
எத்தனைநாள் வைதீகக் கொடுமை [தன்னை
ஏற்றிடுவேன்? சகொன்னே? [முறைமையாமோ?
இத்தரையில் இன்பசுகம் இம்மி [தானும்
இல்லையென்னில் எதுபயன்? [ஆதலாலே
எத்தனித்தேன் உயிர்முடிக்க உண்மை [இஃதே
எண்ணிடுவீர்! என் கருத்தை [எண்ணுவீரே!

## பொது கடவுளுக்கு பேதமேன்?

### அறிவைக் கெடுத்தது அந்தணர்களே!

(இருசனும்பட்டி M. கந்தசாமி)

"இடுவது பிச்சை, பெறுவது மோட்சம்" என்ற வாக்கியப்படி நம் நாட்டில் மோட்சம் பெறுவதற்காகப் பாடுபடுகிறார்கள்.

கடவுள் என்பது எல்லோர்க்கும் பொது. இப்படியிருக்கையில் ஒரு சாரருக்காக (பிராமணர்களுக்காக) மாத்திரம் கடவுளே வேதங்கள் உண்டாக்குவானேன்? இந்துக்களுடைய கடவுள் இந்துக்களைப் போலவும், மகம்மதியர்களுடைய கடவுள் மகம்மதியனைப் போலவும் இருக்கமுடியுமா?

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட குரங்கை தருமம் செய்வான் என்பதில் யாருக்கும் எள்ளளவும் சந்தேகம் கிடையாது. அப்படி இருக்க, கடவுள் பிராமண ரூபமாய் வந்து கபீரை வஸ்திர தானம் கேட்பானேன். அப்படி வந்தவர் எப்படி பிச்சை கேட்கவேண்டும். ஐயா! தருமவானே நான் ஏழை. எனக்கோ உடுத்த வஸ்திரம் கிடையாது. எனக்கு இந்த வஸ்திரத்தைக் கொடுத்து உதவுங்கள் என்று கேட்பதல்லவோ பிச்சை எடுப்பவனுக்கழகு.

அல்லதன்றி கபீரிடத்தில் வஸ்திரத்தைப் பலவந்தமாய் பிடுங்கவும் கபீர் கொடுக்க மறுக்கவும், கடவுள், பணத்தைக் கொடுத்துக் கேட்கவும், அவன் விலை கட்டாது என்று சொல்லவும், வாதாடுவது நியாயமா? ஒன்றும் முடியாமற்போக பிராமணன், "ஐயா! தயவு செய்து இந்த ஏழை பிராமணன்மேல் கிருபை கூர்ந்து வஸ்திரம் தருவீரானல், "கோகுல பிருந்தாவனத்தில் திரு நாளாகும் போது இதை பெருமாளுக்கணிகிறேன். அதனால் உமக்கு கோடி புண்ணியமும், புகழும் உண்டாவதன்றி, ஒரு பிடி அவல் கொடுத்த குசேலன் பெற்ற பேற்றைப்பெறுவீர்" என்று உரைத்தார். இதுதான் ஆஸ்திகத்தைப் பரப்புவதற்கன்றி கடவுள் எல்லோருக்கும் பொது என்பதை காட்டவில்லையே. இதனால் பிராமணர்கள் கடவுளை வணங்கி அவர் பேரால் ஜனங்களை ஏமாற்றி பிழைக்கவும், ஒவ்வொருவரும் பிராமணனை வணங்கி காலில் விழுந்து காணிக்கைக் கொடுத்து அடிமையாய் வாழவும் வழி எழுதப்பட்டதே யொழிய வேறன்று.

ஸ்ரீ மகாபக்தவிஜயத்தில் தீட்டப்பட்டிருக்கும் பக்தர்களில் கபீர் தாஸர் ஒருவர். அவர் பக்தியினால் கடவுளையே நேரில் பார்த்திருக்கிறார். ஒரு நாள் பகவான், "குருமுகத்தாலுண்மையை அறிந்துகொள்" என்று கபீரிடம் சொல்லி மறைந்தார். மகவான் சொல்தவறாமல் நடப்பது பக்தனுடைய கடமையல்லவோ? கபீர், கடமையே பெரிதென மதித்து குருபதேசம் பெற்றுக்கொள்வதற்காக பிராமண குருவாகிய ராமனந்தசுவாமிகளிடம் சென்றார், அதிகாலையில் மடத்துட் பிரவேசித்தார்.

அப்போது ராமனந்தசுவாமிகளின் ஊழியர்களான அந்தணர்கள் கபீரைப்

இதன் தொடர்ச்சி 6ம் பக்கம்

கோழி கூவிற்று! வையம்,
கொண்டதோர் இருளைத், தங்க
மேழியால் உழுதான அந்த
விரிகதிர்ச் செல்வன் ; பின்னர்
ஆழிசூழ் உலகின் காட்சி
அரும்பிற்று ! முனைய விழ்ந்து
வாழிய வைய மென்று
மலர்ந்தது காலை வானம் !

—புரட்சிக்கவி பாரதிதாசன்


# உதயம்

மலர் 22—9—46 இதழ் 8


## அடக்க முடியாது!

"முதலாளி-தொழிலாளியின் இரத்தம் கொண்டு இரத்தினம் உண்டாக்குகிறான்.

நிலச்சுவான்-விவசாயின் வாழ்நாளைப்பழாக்குகிறான்.

அரசன்-வறிஞரை நுகத்தில் மாட்டுகிறான்.

அடிமையத்தில் ஆழ்ந்த ஜனங்களோ—தூங்குகின்றனர்."

* * *

"சிம்மத்தின் இரத்தம் சில சமயம் பலவீனர் தேகத்திலும் ஓடுவதுண்டு
நீர்த்துளியிலும் நெருப்பின் உணர்ச்சி தோன்றுவதுண்டு!

எழுந்திடுக!

என்று இக்பால் தட்டி எழுப்புகிறார்.

"நீங்கள் விதைக்கிறீர்கள்—அயலான் அறுக்கிறான்!

நீங்கள் நெய்கிறீர்கள்-அயலான் அணிகிறான்!

நீங்கள் ஆக்குகிறீர்கள்—அயலான் அனுபவிக்கிறான்!

நீங்கள் ஆயுதம் அமைக்க—அவன் அதை உங்கள் மீதே உபயோகிக்கிறான்!"

என்று ஷெல்லி முழக்குகிறார்.

இவைகளைத் தான் இன்று இந்நாட்டிலே முழக்குகிறார்கள். இது தப்பா? இவை இன்று இந்நாட்டில் நிகழ்கின்றனவா அல்லவா? உண்மையை எடுத்துச் சொல்லி உரிமைக்காகப் போராடுவது தவறு? இதற்கு அடக்குமுறை தர்பாரா? இவ்வுண்மையை எடுத்துச் சொல்லுபவர்களை அழிக்கக் கங்கணம் கட்டுவதா?

பாடுபடுகிறான்-உழைக்கிறான்-வெயிலென்றும்மழையென்றும், இரவென்றும் பகலென்றும், பனியென்றும் குளிரென்றும் கருதாமல் தன் இரத்தத்தை சிந்துகிறான். ஆனல் உண்ண உணவில்லை;ஒதுங்க இடமில்லை; சுகமில்லை; சமாதானம் இல்லை. இதற்கு காரணம் என்ன? உழைப்பின் பலனை இவன் அனுபவிக்க முடிவதில்லை. அனுபவிக்க முடியாதவாறு சமூக அமைப்பு முறை பொருளாதார முறை இருந்து வருகின்றன. இன்றைய சமுதாய முறையும், அமைப்பு முறையும் உழைப்பின் பலனை அனுபவிக்கும் கூட்டத்தினரால் நிறுவப்பட்டதாகும். இன்று இவ்வளவு தூரம் மக்கள் அறிவு பெற்றிருந்தும், சமுதாய முறை ஒரு சிறு கூட்டத்தாரின் கையிலே இருந்து வருகிறதென்றால், நாட்டின் சட்டங்கள் அமைப்பதும் நீதிகள் வழங்குவதும் அவர்கள் கையிலிருக்கிறதென்றால், அந்நாளில் மக்கள் யாவரும் அறிவு விளக்கம் பெறாமல் இருந்து வந்த காலையில் இவ் வேலைகளை யார் செய்து வந்திருப்பார்கள்? உழைப்பின் பலனை அனுபவித்து வந்தவர்கள் என்பதைத் தவிர வேறு யாரால் செய்து வந்திருக்க முடியுமா? இவர்களுக்குத்தான் (பாட்டாளி மக்களுக்குத்தான்) ஓய்வு ஒழிவு இல்லாமல்பாடுபடுவது என்பதைத் தவிர, உழைப்பின் பலனைக் குறித்துச் சிந்திக்கவோ, சமுதாய அமைப்புமுறையைக் குறித்து நினைக்கவோ சட்டங்கள் இயற்றுவதுபற்றி கருதவோ காலம் ஏது? அதனல், அவர்களே (உழைப்பின் பலனை அனுபவிப்பவர்களே) சமுதாய அமைப்பு முறையை ஏற்படுத்தினர்கள்; இதற்கான சட்டதிட்டங்கள் வகுத்தார்கள்; இவற்றை மீறுகிறவர்களுக்கு இன்னின்ன தண்டனை என்று விதி ஏற்படுத்தினர்கள்

இன்று பாட்டாளி தன் நிலையை உணருகிறான். தான் பாடுபடுவதையும் அயலான் அதன் பலனை அனுபவிப்பதையும் காண்கிறான். அதனல் கூறுகிறான்,

"விதையுங்கள்-ஆனல் கொடுங்கோலனை அறுக்க விடாதீர்கள்; ஆக்குங்கள்-ஆனல் அயலானை ஆளவிடாதீர்கள்!

ஆயுதம் செய்யுங்கள்—ஆனல் நீங்கள் உபயோகியுங்கள்" என்று ஷெல்லி கூறியதை.

இது எவ்வாறு தப்பு? இன்றுள்ள சமுதாய அமைப்பு முறைப்படி, சட்டதிட்டங்களின்படி தப்பாக இருக்கலாம் ஆனல் இவர்கள் கருத்துப்படி தப்பா?

"இவைகள் யாவும் எங்கள் உழைப்பை உறிஞ்சும் கூட்டத்தினரால் செய்யப்பட்டவைகள்; இவைகள் எங்களைக் கட்டுப் படுத்தா; நாங்கள் அவைகளுக்குப் பணியமாட்டோம்" என்று கூறுகிறார்கள். யாருக்கும் தீங்கு விளைவிக்க வேண்டும் என்றே எவருடைய நியாயமான உரிமையை பறிக்கவேண்டுமென்றே விரும்பவில்லை. தங்கள் உழைப்பின் பலனை தாங்களே அடைய வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

மனித வர்க்கத்தை ஒரே சமூகமாக எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு மனிதனும் ஆணும் பெண்ணும் அச்சமூகத்தின் ஒரு பாகம், உழைப்பின் பலனும் அச் சமூக முழுமைக்குமே உரியதாகுமேயல்லாது தனிப்பட்ட எவருக்கும் உரியதாகாது. பொதுவாக எல்லோரும் அனுபவிக்க வேண்டியது தான் நேர்மையாகும். எனவே தான் கூறுகிறார்கள், உழைப்பின் பலனை பொதுவாக்குங்கள் யாவரும் அனுபவிக்கலாம்; இதற்கு ஏற்றவாறு சமூக அமைப்பைத் திருத்தியமைப்போம், சட்டங்கள் வகுப்போம் என்று. மனித சமூகம் ஒன்று என்று எண்ணுபவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் இதனை. ஆத்திரங்கொள்வதினலும் அதிகாரம் தம் கையிலிருப்பதினல் அடக்கு முறையைக் கையாள்வதாலும், இவ்வுணர்ச்சியை அடக்கிவிட முடியாது. அல்லது தோழர் காந்தியார் கருதுவதுபோல் சர்க்காவின் மகத்துவத்தை விளக்குவதாலோ அதன் சுழற்சியில் இராமனின் நடனத்தைக் காண்கிறேன் என்று செப்புவதினலோ இவர்களுக்கு சாந்தியேற்பட்டு விடாது. உழைக்கிறான்-உழைப்பின் பலனை வேறொருவர் அநுபவிக்கிறதைக் காண்கிறான்; உழைகிறான் அரை வயிறுக் கஞ்சிக்கும் வழியில்லை; அரை நிர்வாணத்தை மறைக்கவும் கந்தையில்லை; படுக்க கிழிந்த பாயுமில்லை; குந்த ஓட்டை குடிசையுமில்லை என்பதைக்காணும்போது இத்தகைய பசப்பு வார்த்தைகள் அவன் காதுகளில் ஏறுமா? எத்தனை நாளைக்குத்தான் இந்நிலையிலிருப்பான்? என்பதை ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மனிதன் அந்நாளில் அறிவு விளக்கம் பெறாத நாளில் கையினலே தொழில்செய்து வந்தான் அதாவது தனக்குத் தேவையானவைகளை உற்பத்தி செய்து வந்தான். பின்னர், அறிவை உபயோகித்தான். இயற்கையை அடிமைப்படுத்தினன், இயந்திரத்தைக் கண்டு பிடித்தான். கையினல் செய்து வந்த தொழில்களை இயந்திரத்தின் உதவியினல் செய்ய முற்பட்டான். இதனல், உடலுழைப்புகுறைந்தது; தேவைக்கான பொருள்கள் எளிதில் கிடைக்கலாயிற்று. மகிழ்ந்தான், இனி நாம் இராப்பகலாப் பாடுபட வேண்டியதில்லை; ஓய்வு அதிகம் இருக்கிறது; உல்லாச இன்ப மனுபவிக்கலாம் என்று.ஆனல், இவைகள் எல்லாம் கனவாகவே முடிந்தது. காரணம் இயந்திரத்தினல் ஏற்பட்ட பலனை மக்கள் யாவரும் அனுபவிக்க முடியாது போய் விட்டது. ஒரு சிறு கூட்டத்தாரே அனுபவிக்க முடிந்தது. பாடுபடுகிறவன் என்றும் பாடுபட வேண்டியதுதான். அன்று என்ன நிலையிலிருந்தானே அதே நிலையிலிருக்க வேண்டியவனய் விட்டான் இன்னும். இது நியாயமா? சிந்தித்து பாருங்கள். மக்கள் சமுதாயத்தின் நலனுக்காக தோன்றிய இயந்திரங்களையும் அவைகளினல் ஏற்படும் பலனையும் ஒருசிறு கூட்டம் அனுபவிக்க விட்டுவிடுவது, பாடுபடுகிறவன் என்றும் பாடுபட்டுக் கொண்டேயிருக்க வேண்டும் என்பது நேர்மையாகுமா? மக்களின் உழைப்பைக் குறைக்க அவர்களுக்கு நன்மை செய்ய இயந்திரங்கள் தோன்றியிருந்தும், அவர்களுக்கு அவை பயன்படாமல், அவர்கள் என்றும் போல் கஷ்டப்பட்டு, ஒரு நாளைக்கு 10 மணி நேரம் 8 மணி நேரம் பாடுபட்டுத்தான் ஆகவேண்டும் என்றால் இது நியாயந்தானு என்று கேட்கிறோம்? ஒரு புறம் அவ்வியந்திரங்கள் வேலை செய்து வருகையில் அவைகள் உற்பத்தியை, மனிதன் செய்த உற்பத்தியைவிட பல மடங்கு அதிகமாகவும் நயமாகவும் செய்து வருகையில், கஷ்டப்படுகிறவன் எப்பொழுதும் போல் கஷ்டப்படத்தான் வேண்டும், அவ்வியந்திரங்களின் நன்மையை இவன் அனுபவிக்கக்கூடாது என்று தடுப்பதென்றால், இந்தக் கைங்கரியத்தை "மகாத்மா" நடத்துகிறார் என்றால், இதை நாம் பொறுத்துக் கொண்டிருக்கவேண்டுமென்றால், இதைவிட நாணய மற்றக் காரியம் வேறு என்ன இருக்க முடியும்?

நேயர்களே! சற்று நிதானத்துடன் எண்ணிப் பாருங்கள். இவ்வியந்திரங்களைப் பெருக்கி, இவைகளின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்து, அப்பலனை யாவரும் அனுபவிக்கச் செய்து, யாவரும் ஓய்வுபெற்று, திருப்தியாக வாழ்ந்து, உல்லாசமாக வாழ்ந்தால் என்ன குடி முழுகிவிடும்? உலகில் 200 கோடி மக்களுக்கு மேல் இருக்கிறார்கள். இந்தியா

...வில் சுமார் 40 கோடி மக்கள் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இவர்களில் 10 கோடி பேர் முஸ்லிம்கள் இவர்கள் கைராட்டினத்தையோ தக்கிளியையோ நம்புவதில்லை. இவர்கள் போக 30 கோடி மக்களில் டாட்டா, பிர்லா, பஜாஜி கம்பெனி, முதலிய பல முதலாளிகள் இயந்திரங்களை நிறுவி அவைகளின் பலனை அனுபவித்து வருகையில், உலகிலுள்ள மீதமுள்ள 160 கோடி மக்களும் இயந்திரங்களின் பலனை அனுபவித்து வருகையில், இந்தியாவிலுள்ள ஏழைபட்டாளி மக்கள் மட்டும் சர்க்காவை சுற்றி வரவேண்டுமா? இது தொழிலாளவர்க்கத்தின் கிளர்ச்சியைத் தடுக்கச் செய்யப்படும் ஒரு தந்திரமேயல்லாது உண்மையில்லை, இம்முறை நிலைக்குமா என்று கேட்கிறோம்.

மற்றும், கதர் திட்டத்தை ஆரம்பித்த அதாவது 1918ஆம் வருடத்தில் இந்தியாவில் 60 கோடி பெருமானமுள்ள அன்னிய நாட்டு மில் துணிகள் இறக்குமதியாயிற்று என்றும் இன்று பணப் பெருக்கத்தின் காரணமாக 300 கோடி ரூபாய் பெருமானமுள்ள மில் ஜவுளிகள் இந்தியாவில் உபயோகிக்கப்படுகிறதென்றும் அவரே கூறுகிறார்.

இதிலிருந்து கதர் திட்டம் துவங்கியதிலிருந்து அதாவது இந்த 28 வருட காலத்தில் மில் துணி உபயோகம் குறைந்திருக்கிறதா அதிகரித்திருக்கிறதா என்பது தெரியவரும். எனவே, மில் துணி உற்பத்தியுடன் கையினால் கொட்டை எடுத்து, நூல் நூற்று நெய்தல் என்பது ஒரு நாளும் போட்டி போடமுடியாத காரியம் என்பதுடன், மக்களின் இன்றைய உணர்ச்சியைத் தடுக்க கையாளப்படும் ஒரு கபட முறையேயல்லாது வேறு ஒன்றுமல்ல என்பது தான் நமது உண்மையான கருத்தாகும்.

---

## தமிழர்களே! ஒன்று சேருங்கள்!

தமிழ் நாட்டில் தமிழ் மொழியிலே சரியாக கையெழுத்துப் போடத் தெரியாத அதாவது கருப்பன் என்பதற்கு பதிலாக கப்பன் என்று கையெழுத்துப் போடத் தெரிந்தவர்களையும் சேர்த்து 100க்கு 10 அல்லது 12 பேர்கள் என்று கணக்கெடுக்கப் பட்டிருக்கிறது. கல்வியின் வளர்ச்சி எவ்வளவு மோசமாகயிருக்கிறது. இவ்வாறு இருப்பதால், முதல் கவனம் மக்களுக்கு தாய் மொழியில் எழுதப் படிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும். இதில் கவனம் செலுத்த வேண்டும் என்பது எல்லாராலும் ஒப்புக் கொள்ளப்பட்டதாகும். இந்தக் காரியம் முடிந்த பிறகு இந்தியாவின் பொது மொழி சர்வ தேச பொது மொழி என்பது பற்றி யோசிக்க வேண்டும் இது தான் நியாயமும் நேர்மையுமாகும். இதே காரணத்தை முன்னிட்டே 1938ல் ஆச்சாரியார் ஆட்சியில் இந்தியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யப் பட்டதாகும். அதுவும் கட்டாய பாடமாக இந்தியை புகுத்தத் திட்டமிட்டதினால் தான் 1500க்கு மேற்பட்டவர்கள் சிறை செல்லவும் தோழர்கள் தாலமுத்து நடராஜன் ஆகியவர்களை பலியிடவும் ஆன நிலை ஏற்பட்டது. எப்படியோ ஆச்சாரியார் ஆட்சியும் வீழ்ந்தது கட்டாய இந்தியும் ஒழிந்தது.

இப்பொழுது மாகாணத்திலும் மத்தியிலும் காங்கிரஸாரே பதவியிலிருக்கின்றனர். இவர்கள் பதவியிலிருப்பதால் மீண்டும் இந்தியைக் கட்டாய பாடமாகப் புகுத்தி மக்களுக்கு தொல்லை கொடுப்பார்களோ என்று எண்ணப் படுகிறது. ஆனாலும், பிரகாசம் மந்திரி சபை அவ்வளவு மோசமாக நடந்து கொள்ள மாட்டார்கள் என்றே நம்புகின்றோம். ஏன் என்றால், மந்திரி சபை ஏற்பட்ட பிறகு இந்தியை கற்பிக்க தீவிர நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றாலும், கட்டாயமாகப் புகுத்தவில்லை. இந்தி உபாத்தியாயர்களை நிரந்தர மானவர்களாக நியமனம் செய்ய வேண்டுமென்றும், அவர்களுக்கு ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லையென்றும் நாடோறும் ஒவ்வொரு உத்தரவு பிறப்பித்த வண்ணமாகவேயிருக்கின்றனர்.

இருந்தாலும், ஒருவர் இஷ்டப்பட்டால் எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் படிக்கட்டும் கட்டாயம் கூடாது என்பதுதான் நமது ஆட்சேபனை.

ஆனால், சிலர் இந்தியை கட்டாயப் பாடமாகப் புகுத்த வேண்டும் என்று புரளி செய்து வருகின்றனர். உதாரணமாக மதுரையில் சமீபத்தில் நடைபெற்ற 6-வது ஹிந்துஸ்தான் மாநாட்டில்,

"மகாணத்தில் எல்லா உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும் இந்துஸ்தானியை கட்டாய பாடமாக ஏற்பாடு செய்யும்படியும் சர்க்கார் ஊழியர்களும், நகரசபை ஜில்லா போர்டு ஊழியர்களும் ஹிந்துஸ்தானி கற்கும்படி சர்க்கார் உத்தரவு பிறப்பிக்கும் படியும், இனிமேல் நியமிக்கப்படும் ஊழியர்களுக்கு இந்துஸ்தானி ஞானம் அவசியமென்று சட்டமியற்றும் படியும் சர்க்காரைக் கேட்டுக் கொள்வதாக" தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

இத் தீர்மானங்கள் எவ்வளவு போக்கிரித் தனமானதும் குரும்புத்தனமானதும் என்பதை நேயர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒழிந்துபோன சனியனை மீண்டும் கிளப்ப இவர்கள் விரும்புகிறார்கள் என்பதும், இதனால் மக்கள் (தமிழர்கள்) அறிவைப் பாழ்படுத்தி அறிவற்றவர்களாக்கி விடலாம் என்று கருதுகிறார்கள் என்பதும் தவிர வேறென்ன கொள்ளமுடியும்?

அடுத்தபடியாக, இந்தியாவில் மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்படவிருக்கையில், மாகாண சர்க்கார் காரியாலயங்கள் யாவும் அந்தந்த மாகாண மொழியில் நடவடிக்கைகள் நடக்க வேண்டும் என்ற நிலையிருக்கையில், அதாவது தமிழ் மாகாணம் பிரிக்கப்பட்டு தமிழ் மொழியிலே எல்லா சர்ககார் நடவடிக்கைகளும் நடக்க வேண்டியிருக்கையில், ஹிந்தி மொழிக்கு என்ன அவசியம் என்று கேட்கிறோம். சர்க்கார் ஊழியர்களும் ஜில்லா போர்டு முனிசிபல், நகரசபை ஊழியர்களும் ஹிந்தி கற்கவேண்டிய அவசியம் என்ன? இனி சேர்க்கப்படும் ஊழியர்கள் ஹிந்தியை கற்றிருக்க வேண்டிய அவசியம் என்ன? என்று கேட்கிறோம். தமிழ் மொழியிலே நடவடிக்கை எடுக்கப்படும் போது ஹிந்தி மொழிக்குத் தேவையென்ன? இன்று அத்தகைய ஊழியர்களுக்கு ஆங்கிலம்தேவை [illegible] ஆங்கிலத்தில் சர்க்கார் நடவடிக்கைகள் நடப்பதால்தான். அதில்லையென்றால் ஆங்கிலத்திற்கும் அவசியமில்லை, ஹிந்திக்கும் அவசியமில்லையல்லவா? ஆகவே, இவ்வாறு ஹிந்தியை கற்கவேண்டும் என்று கட்டாயப் படுத்தச் சொல்லுவது, ஹிந்துக்கு அதாவது ஆரியத்திற்கு, வடநாட்டு ஆதிக்கத்திற்கு தமிழ்நாட்டை அடிமைப்படுத்தி வைக்க வேண்டும் என்ற கருத்தைத் தவிர வேறு என்ன இவர்களுக்கு இருக்கிறது என்று கேட்கிறோம். எனவே, இவ்வளவு காலமாக ஆங்கிலேயனுக்கு அடிமையாயிருந்தது போதும், இனி ஆரியனுக்கும் வடநாட்டானுக்கும் அடிமையாயிருக்க முடியாது, தமிழன் இனி யாருக்கும் அடிமையாயிருக்க மாட்டான் என்ற உறுதிகொண்டு தமிழர்கள் ஒன்று திரண்டு போராட இந்தச் சமயத்திலாவது முன் வர வேண்டாமா என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

---

"நல் வினையின் மேன்மையைக் கருதியே நல் வினையைச் செய்தல் வேண்டுமேயன்றி அதனால் எற்படும் லாப நஷ்டங்களைக் கருதல் கூடாது."

—அக்பர்.

"சங்கீதமும், சிரிப்பும், உணர்ச்சியின் வளர்ச்சிக்குரிய சிறந்த அப்பியாசங்களாகும். சிரிப்பு மனச்சோர்வை ஓட்டுகின்றது; மனச்சோர்வுள்ளவன் எந்தத்துறையிலும் வெற்றியடைய மாட்டான்."

—டக்ளஸ் பேர்பாங்ஸ்.

8ம் பக்கம் தொடர்ச்சி

பொதுவாக, ஒன்றே குலமும் ஒருவனே தெய்வமும் என்ற கொள்கையினைக் கொண்ட நம் நாடு மீண்டும் அதே கொள்கையில் தழைத்தோங்க வேண்டுமென்றால் இத்தகைய கலப்பு மணங்கள் பெருக வேண்டும். அதற்கு, இத் தெப்பாங்கு பேருதவியாக யிருக்கும் என்பது நமது கருத்து. ஆகவே, திராவிட மக்கள் இச்சிறு புத்தகத்தை உளமுவந்து வரவேற்பார்கள் என்று நம்புகின்றோம்.

புத்தகம் ஒன்று விலை 3 அணா தான்.

விற்பனையாளர்:
**வ. வீரராசன்,**
திராவிட கழக வெளியீடுகள்,
தாடிக்கொம்பு ரோடு,
வ. வி. சு. தாருமண்டி, திண்டுக்கல்.

திராவிடப்பண்

இது புதுவைத் தோழர் சிவம் அவர்களால் இயற்றப்பட்டது. திராவிட நாட்டு கிளர்ச்சியை பாடல்கள் மூலம், நவீன மெட்டுக்களில் நன்கு விளக்கியிருக்கிறார். இதிலும் தமிழர் மணம் வீசுவதைக் காணலாம். திராவிடர்கள் ஆதரிப்பார்கள்என்பது திண்ணம்.

விலை 3 அணா

கிடைக்குமிடம்:- ஞாயிறு நூற்பதிப்பகம், 28, அம்பலத்தாடையார் மடத்துத் தெரு, புதுச்சேரி,
[F. I.

**உதயம்**

சந்தா விபரம்:

உள்நாடு:-

| | |
|---|---|
| வருடச்சந்தா ரூ | 5—0—0 |
| 6 மாதச்சந்தா ரூ | 2—8—0 |
| தனிப்பிரதி ரூ | 0—1—3 |

வெளிநாடு:-

| | |
|---|---|
| வருடச்சந்தா ரூ | 7—0—0 |
| 6 மாதச்சந்தா ரூ | 4—0—0 |

மானேஜர்,
"உதயம்"
**திருவத்திபுரம். N.A.**

பார்த்து, "அடா! துலுக்கப்பயலே! ராத்திரியி லிங்கு திருடவாவந்தாய்? நாங்கள் விழித்திருக்கிறோமென்று நொந்தாய்? இங்கே முரடரன்றி குருடரில்லையே? நீ நினைத்துவந்தது தொல்லையே? இனி உன்னே வரவேண்டாம். சீக்கிரம் வெளியே செல்" என்று பதட்டத்துடன் அதட்டினார்கள்.

கபீர், ஐயா! பிராமணோத்தமர்களே! சாந்த குணமுள்ள வேதாந்திகளே! நான் உள்ளே வருவதற்கு முன்பு ஏன் இவ்வளவு கோபம்? நான் இங்கு திருடவாவந்தேன்? குருபதேசம் பெற்று கொள்ளவல்லவோ வந்தேன்? என்று பரிதாப முகத்துடன் சொன்னான்.

இவ்வார்த்தைகளைக்கேட்ட ஊழியர்களாகிய பிராமணர்கள் குருவினிடத்தில் முறையிடுவதல்லவோ! முறை. நியாயமும்கூட. அஃதன்றி அடா, துலுக்கப்பயலே! பசுவைத் தின்னும் புலையனாகிய நீயா குருபதேசம் பெற்றுக்கொள்ளப் போகிறாய் சீ சீ நாயே போடா வெளியே! அதிகாலையில் நீச்சனாகிய உன் முகத்தைக் காட்டாதே. போகாமலெங்களை வாட்டாதே? கொலை செய்யும் குணயினத் துலுக்க வம்சத்தில் பிறந்த துடுக்கனான உனக்கேன் இவ்வளவு முடுக்கான வார்த்தை? ஜீவகாருண்யமுள்ள பிராமணர்களிடத்தில் உமக்கென்ன காரியம்? அடியார்கள் வருகிற வேளையுமாச்சுது. ஓர் வேளை அவர்கள் வந்தால் நீ தொடப்போகிறாய். தொட்டால் துக்கப்படுவாய்! அவர்கள் உன்னைத் தொட்டுக் கொண்டால் கஷ்டப்பட்டு பின்னும் [illegible] பார்த்து [illegible] செய்து கொள்ளவேண்டும். பிராயசித்தம் பெறவேண்டும். நல்ல தனத்தால் சொல்லுகிறதை கேளும். இல்லாவிட்டால் கலகம் மூளும் என்று ஒரு கோலினால் தள்ளத் தொடங்கினார்கள்.

அன்பர்களே இதுதான் ஜீவகாருண்யமா? இதுதான் நியாயமா? பக்தன் படும் பாட்டைப் பாருங்கள். எங்கே கடவுள் என்று கேளுங்கள் தானம் வாங்கவந்த கடவுள் கஷ்டத்தை நீக்க வரக்கூடாதா? இதுதான் கடவுள் யோக்கியதையா! ஏடு எழுதின பண்டிதர்களைத்தான் கேட்கவேண்டும்.

மெய்யன்பர்களே! கபீர் என்ன செய்வார்? வாதாடினார். ஓ, இருபிறப்பாளர்களே! மாட்டை ஓட்டுவதுபோல மனிதனாகிய என்னை ஓட்டவா வந்தீர்கள்? அடியார்களைத் தொடாமல் ஒரு பக்கமாக இருக்கிறேன். ஒரு வேளை அவர் தொட்டுக்கொண்டாலும் ஆவதென்ன? நானும் ஸ்நானம் செய்து பரிசுத்தமாகவேதான் இருக்கிறேன். இவ்வளவு அக்கிரமம் செய்வது உங்களுக்குத் தகுமா? என்று பொறுமையுடன் பகர்ந்தார். மடம் எல்லோருக்கும் பொது அன்றி அவர்களுக்கு மாத்திரம் என்ன உரிமை? இந்த சமயத்தில் உலக ரட்சகன் பிராமணர்களுக்குப் பயந்து இருந்தாலும்கூட பிராமணர்களுக்குத் தெரியாமலாவது கபீருக்குக் காட்சி அளித்திருந்தால்தான் கோரிய ஆவா நிறைவேறியிருக்கும். இங்கு அதுகூட இல்லையே?

கபீர், பிராமணர்கள் தள்ளியதடியை நோக்கித் தெண்டனிட்டு சற்குருநாதனுடைய வரவுக் கெதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அது சமயம் அந்த பிராமணர்கள் கபீரை அதே தடியால் வையப்புடைத்தனர். ஈன வார்த்தைகளால் வைதார்கள். பிறகு மடத்துக்குள் ஓடி மறைந்து கொண்டார்கள். கபீர் தேக நோவைப் பாராமல் தொண்டர்கள் கூட்டத்தில் நுழைந்து மடத்துள்ளே சென்றார். அது தெரிந்த துவேஷமுள்ள தொழுகுலத்தோர் அதிக ரோஷத்துடன் கபீருடைய மென்னியைப் பிடித்துத் தள்ளி, நகங்களால் பிசின்றாய் அடித்து உதைத்து வெளியே போடா என்று இழுத்துத் தள்ளினார்கள்.

சகோதரர்களே! மகம்மதிய நிலகமாயிருந்தும் இந்துக்கள் வணங்கிய தெய்வத்தை பக்தியால் சேவிக்க காணவிழைந்ததின் பயன்தான் இந்தச் சமயத்தில் கடவுள் பக்தனுக்குத் துணை புரிவதன் நோக்கம்தான் என்னே?

கபீர் தாமே மடத்தின் வாயிலில் படுத்துக்கொண்டு "ஓ சற்குருநாதனே! மெய்ஞானபோதனே! உமக்கபயம். உமது தரிசனம் செய்யவந்த அடியேனை இந்தச் சாது பிராமணர்கள் அடித்துக் கஷ்டப்படுத்துகிறார்கள். எனக்காரும் திக்கில்லையா?" என்றோலமிட்டழத் தொடங்கினார். இது ஆண்டவன் சந்நதியில் பக்தன் படும் பாடு.

இவ்வோசையைக்கேட்ட ராமாநந்த சுவாமிகள் உடனே வெளியிலோடி வந்து "ஐயோ! இந்த சிறு பாலகனை உதிரம் வடிய யார் அடித்தது" எனச் சீற்றத்துடன் கேட்டார். அது கேட்ட மறையோர் "ஓ சுவாமிகளே! இவன் துலுக்கன். பசுவைத் தின்னும் பறையன். முடுக்கான பேச்சன். கபடம் நிறைந்த கயவன். அரியானை துவேஷிக்கும் [illegible] அம்பாளைப் பரிக்கும் [illegible]கேயன். கர்வமிகுந்த கசடன். மேல் கீழாக்கும் விகடன். வீணாயமர்செய்த கபடன். களங்கமுள்ள கபடன். தங்களிடம் உபதேசம் பெற்றுக் கொள்ள வந்தானாம். ஆசாரியாரின்றி நொந்தானாம். நாங்கள் தேவரீருடைய மேன்மையை விரித்து பலவிதங்களாயுரைத்து உனக்குபதேசம் செய்யமாட்டார் தயவேஷம் தாமாட்டார். என் பதாகப் பலதரம் சொல்லி வெளியே போகச் சொன்னோம். கேட்காமல் ஸ்நானம் செய்து பரிசுத்தமாயிருக்கும் எங்கள்மேல் விழுந்து முட்டிக்கால் மேல் உட்கார்ந்து எழுந்து அவமரியாதைச் செய்து வாயில் வந்தபடி வைது, இந்தமடம் பொதுவான இடம், உங்களுக்கென்ன சொந்தம் என்று எங்களை தொந்தரவுச் செய்தான். அதனால் நாங்கள் இவனை வெளியில் தள்ளி அடித்தோம், ஈன வார்த்தைகள் கேட்கவும் பட்டோம். தேவரீருக்கிஷ்டமிருந்தால் இந்த துஷ்டனை சிட்சைப் பிரஷ்டனை சிஷியனாக்கிக் கொண்டு அனுக்கிரகம் புரியுமையா" என்று சொல்லி மௌனமாய் நின்றார்கள்.

இது கேட்ட குரு என்ன செய்திருக்க வேண்டும்? உடனே சிறுவன் மீது அன்பு கூர்ந்து அவனை சிஷ்யனாக ஏற்றுக் கொள்ள வேண்டும். சிறுவனை அடித்த ஊழியர்களை பழிக்குப்பழி வாங்கி இருக்க வேண்டும். உபதேசம் பெற்றுக் கொள்ள வந்தவன் எந்த வம்சத்தவனாய் இருந்தால் என்ன? மகம்மதிய மதம் பசுவை கொன்று தின்பதற்காக உபதேசம் செய்கிறது. இதை ஆட்சேபிக்கும் அன்பர்கள் ஏன் யாகாக்னிக்கா கொழுத்த ஆடுகளையும் மாடுகளையும் கொல்லுகிறார்கள்? இப்படி யிருக்கப் பக்தனை கொடுமை செய்த கொலை பாதகர்களை ஏன் தண்டிக்கக் கூடாது? பிராமணர்கள் செய்யும் இடுக்கண் இடுக்கணல்லவா? அல்லது பிராமண பக்தரை அப்படி அடித்திருந்தால் அதன் கதை எவ்வாறிருக்கும்?

ஊழியர்கள் செப்பிய வசனங்களைக் கேட்ட ராமானந்த சுவாமிகளுக்கு முகங்கருகி கோபம் பெருகி "கோவைக் கொல்லும் கொடியனுக்கா நான் உபதேசம் செய்ய வேண்டும்? சபாஷ் நல்ல வார்த்தைச் சொன்னீர்கள்" என்று சினந்து கபீரைப் பார்த்து "அடாமூடா! மந்திரம் என்பது கிள்ளுக்கீரையோ? உபதேசம் பெற்றுக்கொள்ள விரும்புகிறவன் வேதம் ஓதிய விவேகனாய், ஆசான்மேல் மிகுந்த மோகனாய், சாந்த குணத்திற் சிறந்தவனாய் இருக்கவேண்டும். அப்படிக்கில்லாது அற்பகுலத்தில் உற்பவித்த சொற்ப குணமுடைய உந்தனுக்கா நானுபதேசிப்பேன்? உன்னை என்னுடைய மடத்துக்குள் விட்டவர்களையும் உள்ளே வரப்பார்த்திருந்தவர்களையும் உதைக்கிறேன் பார்! ஓ வேதியர்களே! இந்த அறிவில்லாத பேயை உதிரம் புசிக்கும் வாயானை அந்தணர்களோடு எதிர்த்த துவேஷியை அடித்துத் துரத்தி விடுங்கள்" என்று சொல்லி மடத்துள்போனார்.

என்னே அன்பு! என்னே கருணை! எல்லோருக்கும் உபதேசிக்கும் உயர்குலத்தோராகிய பிராமணர் இவ்வளவுச் சீற்றம் கொள்வது தான் குருவின் முறையோ! இவரைத்தான் வேதம் ஓதிய விவேகன் என்று சொல்வதா? இவர்தான் பரமாத்மாவின் பதம் கூட்டுவிப்பவரா?

[illegible]ப்பணத்தை ஆலயம் கட்டிய மாணிக்கவாசகருக்கு இடையூறுகள் யாவும் தப்புவிக்கப் பட்டதும், ஞானசம்பந்தர் 8000 சமணர்களைக் கழுவேற்றியதும், குழந்தை சங்கரனைத் தேவனாக்கியதும், பிராமண குலமக்கள் தாழ்வான நிலையை அடைய மாட்டார்கள், கஷ்டப்பட மாட்டார்கள் பகவான் கஷ்டமில்லாமலேயே அவர்களுக்கு அருள் சுரப்பார் என்பதும், நந்தன், திருப்பாணாழ்வார் போன்ற பார்ப்பனரல்லாத மக்கள் எத்தனை பக்திப் பரவசத்தோடு பூஜித்தாலும் இறைவன் கடுமையாகச் சோதிக்கிறார் என்பதற்கு காரணம் என்ன என்பதை வாசகர்களே சிந்திக்க வேண்டும்.

## நீத்தார் நினைவு நாள்

சலகண்டபுரம், செப்ட. 6

தோழர்கள் அ. ப. அர்த்தநாரி, ப. கண்ணன் ஆகியோரின் அன்னையார் திருமதி **சிவகாமி அம்மையார்.** அவர்களின் இயற்கை முடிவின் இறுதிக் கடன் 4—9—46ல் புரோகிதமின்றி தமிழ் முறையில் செய்யப்பட்டது. மாலை 6-மணிக்கு அவர்கள் வீட்டில் நீத்தார் நினைவுக் கூட்டம் நடைபெற்றது. ஆசிரியர் புலவரேறு அ. வரதநஞ்சைய பிள்ளை, அ. வ. இராமலிங்கம், ச. மு ரத்தினம் ஆகியோர் ஆறுதல் சொற்பொழிவாற்றினர். தமிழ் நாட்டின் பல பகுதிகளினின்றும் வந்திருந்த அநுதாபக் கடிதங்கள் செய்திகள் படிக்கப்பட்டன. இறுதியில் தோழர் ப. கண்ணன் நன்றி கூறினர்.

---

## மறைவு

பண்ணுருட்டி

இவ்வூருக்கடுத்த சித்திரைச் சாவடியில் நமதியக்கத் தோழரும் பெரியார் பெரியார்மாட்டு பேரன்புக்கொண்டவருமான தோழர் **பாப்பு** அவர்கள் 5—9—46 இரவு கடலூர் ஆஸ்பத்திரியில் இயற்கை எய்தினர். அவர் தம் குடும்பத்திற்கு ஆழ்ந்த அநுதாபம்.

---

"பெரும்பாலான மக்கள், பணக்காரர்களெல்லாம் வைதண்டத்தில் இருப்பதாக எண்ணுகிறார்கள், ஆனல் அது அவர்களுக்கு நரகமே"

—இங்கர்சால்.

★ ★ ★

"ஜாக்கிரதையுடனும் செவ்வையாகவும் செய்யப்படுகிற விஷயங்களுக்குப் பயம் என்பது கிடையாது"

—ஷேக்ஸ்பியர்.

★ ★ ★

"பார்ப்பனரல்லாதார்களின் தாழ்வான நிலைக்கு காரணம் அவர்கள் பெண் கல்வியை நிராகரித்ததேயாகும்'.

—கிருஷ்ண பாய்'


## உங்களுக்குந் தேவையா?

திராவிடர் கழக கொள்கைகளைத் தாங்கி சுமார் எட்டு ஆண்டுகளாக நடைபெற்றுவரும் ஓர் வாரப் பத்திரிகை சுமார் ரூ. 2000 பெருமான அச்சுக்கூட சாமான்களுடன் விற்பனைக்கு தயார்.

சுமார் 2000 பிரதிகளுக்கு "நியூஸ் பிரிண்ட்" கோட்டாவும், சர்க்கார் விளம்பர மூலமும், பிரபல ஆங்கில விளம்பர கம்பெனிகள் மூலமும் குறைந்த பட்சம் வருடத்திற்கு ரூ. 2000 நிரந்தர விளம்பர வருமானமும் உண்டு.

திராவிடர் கழக கொள்கைகளைத் தழுவி இப்பத்திரிகை எதிர்காலத்தும் நடைபெற்று வரவேண்டுமென்று விரும்பப்படுவதாலேயே, "உங்களுக்குத் தேவையா?" என திராவிடத் தோழர்களுக்கும், பிரமுகர்களுக்கும் ஒரு சந்தர்ப்பமளிக்க விரும்புகிறோம்.

தேவையுள்ளவர்கள், தாங்கள் விரும்பும் தொகையைக் குறிப்பிட்டு எழுதவும். விபரங்களுக்கு:—

**T. சிவஞானம்,**
மானேஜர்,
யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட்,
(ஜெகம் & கோ) தெப்பக்குளம், P. O.
திருச்சி.

2-ம் பக்கம் தொடர்ச்சி

ளில் நிப்பொறி கிளம்பியது. என்ன விஜயா வரவில்லையா? என்றார் பரமேஸ்வரன். நீங்கள் போங்கள் நான் பிறகுவருகிறேன் என்று கூறிவிட்டு, நடராஜனிடம் பேசுவதிலேயே இருந்தாள். பரமேஸ்வரன் கோபம் பொங்க, போய்விட்டார். பிறகு நடராஜனும், விஜயாளும் நான்கு வருட சங்கதிகளை ஒரே மூச்சில் முடிக்க முயன்றனர். "போர்க் களம் போய்வந்தவனின் பேச்சிற்கு முடிவு உண்டோ?" என்பது புதுமொழியன்றோ?

விஜயாமீது கோபம் கொண்டு திரும்பிய பரமேஸ்வரன் நேரே நோய்வாய்ப்பட்டிருக்கும் பிள்ளையிடம் வந்து, விஜயா யாரோ ஓர் இராணுவ உத்தியோகஸ்தனிடம் கௌரவ குறைவாக பழகுவதாய் சொல்லி, இன்னும் பல விதமாய் அவளை இகழ்ந்துவிட்டுப்போனான். இவை யாவையும் கேட்ட பிள்ளையின் மனம் பல வித துன்பமடைந்தது. அவள் வரட்டும், வீட்டைவிட்டு துரத்தி விடுகிறேன். கணபதி இருந்தாலும் காப்பாற்றுவான் அவனும் இறந்தான், எங்கேபோய் சாகிறாள் என்று பார்க்கிறேன் என்று உறுதி செய்துக் கொண்டார். இரவு 10-மணி இருக்கும் நடராஜனும், விஜயாளும் வந்தனர். வந்ததும்,

பிள்ளை :—'விபசாரி! ஏதோ போகட்டும் என்று இருந்தால் எல்லை கடந்து போகிறாய் வஞ்சகி! போ வெளியே! என்று கர்ஜித்தார். இதைக் கேட்ட விஜயாளும், நடராஜனும் நடுங்கி விட்டனர்.

ஏன் இந்த கோபம்? என்றாள் விஜயா.

யார் இவன்? என்றார் பிள்ளை. ஏன் இந்த கேள்வி?

எல்லாம் பரமேஸ்வரன் சொன்னான்.

ஓ, அப்படியா? விளங்கிற்று. ஆம்! இவரைத்தான் நான் பள்ளியில் படிக்கும்போது காதலித்தது ஆனால் நான் ஏழை என்ற காரணத்தால் இவரின் தந்தை என்னைக் கலியாணம் செய்ய சம்மதிக்கவில்லை. அதனால் இவர் ராணுவத்தில் சேர்ந்துவிட்டார். பிறகு என் தந்தையின் வறுமையை போக்கவும், என் வாழ்வில் ஓர் இன்பம் காண்பேம் என்றும் உம்மை மணந்தேன். ஆனாலும் உம்மிடம் நான் என்ன சுகம் அடைந்தேன் என்று உமக்கே தெரியும். பரமேஸ்வரனை பொழுது போக்க ஓர் நண்பனாக ஆக்கிக்கொண்டேனே அன்றி வேறு இல்லை. இன்று இவரை கண்டு பேசியதற்கு உம்மிடம் ஏதேதோ சொல்ல அதை நீரும் நம்பி என்னை இவ்விதம் கடிந்துக் கொண்டீர் என்று கண்ணீர் பெருகினாள். கொஞ்ச நேரம் அவர் ஓர் தனி லோகத்தில் சஞ்சரித்தார். நெஞ்சத்தில் ஓர் பெரிய போராட்டம். பிள்ளை அவள் இன்னும் கன்னிதான், அவளை அவள் காதலன் நடராஜனுக்கு கட்டிக்கொடுத்து விடு, உன்னை உலகம் புகழும். பிள்ளை, நீயோ இறக்கபோகிறாய், உனக்குப்பின்னால் விஜயா விதவையாகி அவளை மற்றவர் வேறுவிதமாய் சொல்லாமல் நடராஜனுக்கே கட்டி கொடுத்துவிட்டால் உன்னை உலகம் தியாகி என்றுப் போற்றும் என்று அவர் மனம் சொல்லியது.

உடனே தன் வக்கீலை அழைத்து வரச் சொன்னார், வந்ததும் தான் மனமுவந்து தன் மனைவிக்கு நடராஜனை இரண்டாந்தாரமாக கட்டி கொடுப்பதாயும், தன் சொத்து பூராவும் விஜயாளுக்கே உரியது என்று எழுதச் சொன்னார். வக்கீல் பிரமித்தார், டாக்டரை அழைக்கலாமா? என்று தோன்றியது. உடம்புக்கு ஏதேனும்? என்று கேட்டார் வக்கீல். அதற்கு பிள்ளை "அதெல்லாம் ஒன்றுமில்லை சார் அவள் எதிர்காலத்தை யோசித்தேன், இச்சிறு வயதில் இவள் விதவை ஆகி விட்டால், இவள் எத்தனை நாட்களுக்கு நெறியுடன் வாழமுடியும்? ஆகையால் தான் என் கண் எதிரிலேயே ஓர் பெண் இறக்கும்போது தன் கணவனுக்கு தனக்கு பிடித்த பெண்ணை சிபார்சு செய்யவில்லையா? அது போல எனக்கு பின்னால் நடராஜன் தான் விஜயாளின் கணவன் என்று நடராஜன் கையில் விஜயாளின் கையை பிடித்து கொடுத்தார். நடராஜனும், விஜயாவும் ஆனந்தமும், துக்கமும் கலந்த கண்ணீர் உகுத்தனர். இதுதான் நீதி! இதைப்போல் எதிர்காலத்தில் ஒவ்வொருவரும் செய்வாரா என்று ஏங்கியே உயிர் நீத்தார் சீர்திருத்தவாதி R. K. பிள்ளை.

மறுநாள் பத்திரிகையில் R.K. பிள்ளையின் விண்ணப்பதுடன், விஜயாராணி, நடராஜன் படத்தையும் கண்ட சரவண பிள்ளையும் தியாகராயநகர் அடைந்து, மகனுடம் மன்னிப்பு பெற்று வாழ்கிறார். அவர் தியாகி அன்றோ? என்று அடிக்கடி விஜயாளும், நடராஜனும் பிள்ளையின் பிரிவுக்கு வருந்துகின்றனர். அவரைக்காணும் பலர் பலவிதமாய் பேசிக்கொண்டாலும் சீர்திருத்தவாதிகளுக்கு இதைவிட ஆனந்தம் வேறேது? விஜயாளை விதவையாக்காமல் நீடித்த சுமங்கலியாகச் செய்த R. K. பிள்ளையின் ஆத்மா சாந்தி அடையட்டும்.

# "அணுக்குண்டு"

(எமனார்)

ரயில் நின்று போவதால் குறிப்பிட்ட தேதிகளில் நடக்கும் கல்யாணத்திற்கு மாப்பிள்ளை போக முடியாது—

—கல்கி

அட ஈஸ்வரா! திருமணப் பத்திரிகைகளிலே உன் திருவருள், உன் மகன் திருவருள், அல்லது உன் சம்மந்தி திருவருள் என்று தானே போட்டு முதலிலே ஆரம்பிக்கிறார்கள். அப்படி இருந்தும் மாப்பிள்ளையே கல்யாணத்திற்கு போக முடிவதில்லை என்றால் என்ன வெக்கக்கேடு!

★ ★ ★

நாளை முதல் டில்லியில் இடைக்கால ஏற்படாக அமையவிருக்கும் தேசிய சர்க்கார் இந்திய **கய** ராஜ்யத்துக்குப் போடப்படும் அஸ்திவாரம் என்பதில் சந்தேகமென்ன?

—பிரசண்ட விகடன்

சந்தேகமே இல்லை!

(சுய என்பதற்குப் பதில் **கய** என்று அச்சிடப்பட்டு இருக்கிறது).

★ ★ ★

மந்திரிகள், கொள்கை ஒன்று, செயல் ஒன்றாக இருப்பதும் அவர்களுடைய எதிரிகளாயிருக்கும் காங்கிரஸ்காரரும், காங்கிரஸ் அல்லாதவரும் அவர்களை எதிர்பதற்காக அந்த முரண்பாட்டை உபயோகித்துக் கொள்வதும் நம்முடைய ஊழியர்களுடைய நிலைமையைக் கஷ்டமாகச் செய்து வருகிறது.

—சங்கர் ரால் தேவ்.

பேஷ் தேவ்ஜி! நன்றாகச் சொன்னீர்கள். உங்கள் மகாத்மாவே முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறாரே, மந்திரிகள் என்ன செய்வார்கள் பாவம்!

★ ★ ★

பெண்கள் தங்கள் பலத்தையும், ஒழுக்கத்தையும், கடவுளையுமே பண்டைக் காலத்து திரௌபதி நம்பி இருந்தது போல நம்பி இருக்க வேண்டும்—

—காந்தியார்.

அதுமட்டும் போதுமா பாபுஜி! திரௌபதி ஐந்து புருஷனை நம்பி இருந்தது போல நம் பெண்களும் நம்பி இருந்தால் தானே உலகம் உய்ய ஒரு வழி தோன்றும்!

★ ★ ★

இடைக்கால சர்க்கார் வரும்போதே கல்கத்தாவில் ஆயிரக்கணக்கான பலி வாங்கிக்கொண்டு வந்திருக்கிறது—

—தமிழ் மணி

சரிதான்! ஆரம்பமே அடாணவில் இருந்தால், மத்திமமும் முடிவும் எப்படி இருக்குமோ?

★ ★ ★

காமிரா வாங்கியதில் லென்சுகளைக் காணோம். —தினசரி செய்தி.

தோல் இருக்க சுளை முழுங்கின கதையாக இருக்கிறதே!

★ ★ ★

வார்தாவில் பாரதி திருநாள்—

—தினசரி

என்ன ஆச்சர்யம்! குதிரைக் கொம்பு, புலிப் பால், போல இருக்கிறதா உங்களுக்கு! நிஜம் தான்; பொய்யே இல்லை. ஆரியருக்குத் தான் **வார்தா** கைலாகு கொடுத்ததே தவிர ஒரு திராவிடக் காங்கிரஸ்காரருக்கு அல்ல!

★ ★ ★

ஜனங்களுக்கு எந்த வரியுமே பிடிக்கிறதில்லை —காந்தியார்.

ஜனவரி, பிப்ரவரி, கூடவா!

★ ★ ★

பெண்கள் கற்பழிக்கப்பட்டதுமான கோரக் காட்சிகளைக் கல்கத்தாவிலே கயவர்கள் நடத்தி தங்கள் தங்கள் மத வெறிக்குச் சாந்தி தேடிக் கொண்டார்கள்.

—பிரசண்ட விகடன்

மதுரை "கருஞ்சட்டைப் படையினர்" மாநாட்டில் ஒரு தோழியவரை நிர்வாணமாக்கின கோரக்காட்சி இந்து மத சாந்திக்கா? அல்லது ஆரிய வெறிக்கா?

★ ★ ★

---

## திருமணங்கள்

திருவத்திபுரம் தோழர் சி. வே. சுப்பராயன் அவர்களுக்கும் சத்தியவிஜய நகரம் தோழர் தி. சு. மாணிக்க முதலியார் மகள் தோழியர் பார்வதிக்கும் 9—9—46 தேதி திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

★ ★ ★

திருவத்திபுரத்தில், தோழர் வே. மு. புண்ணியகோட்டி முதலியார் மகன் தோழர் பாவாடைமூர்த்திக்கும் தோழர் ஐ. தா. தர்மலிங்க முதலியார் மகள் தோழியர் கனகாம்பாத்திற்கும் தோழர் சுப்பிரமணியனுக்கும் தோழியர் பாலகுசத்திற்கும் 8—9—46ல் தமிழ்த் திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

மற்றும்; திருவத்திபுரம் தோழர் ஐ. நாராயணசாமி முதலியார் புதல்வன் தோழர் கணேசனுக்கும் புதுப்பேட்டை தோழர் வேலு முதலியார் மகள் மாணிக்கத்திற்கும் 8--9--46ல் தமிழ்த்திருமணம் நடைபெற்றது.

ஷை 3 திருமணங்களுக்கும் தோழர்கள் சென்னை கனகசபை முதலியார், முருகேச முதலியார், ஐ. தர்மலிங்க முதலியார் ஆகியவர்கள் முறையே தலைமை வகித்து நடத்திக்கொடுத்தார்கள்.

★ ★ ★

11—9—46ல் காஞ்சிபுரத்தில் தோழர் C. V. M. அண்ணாமலை அவர்களுக்கும் தோழர் பரசுராமனார் செல்வி தோழியர் கிரிசடைக்கும் காஞ்சிபுரம் பங்கீட்டு அலுவலர் தோழர் K. இராமலிங்கம், M.A., அவர்கள் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டி தோழர்கள் காஞ்சி கல்யாணசுந்தரம், ஈழத்து அடிகள், புலவர் கோவிந்தன், மாவண்ணா தேவராசன், புலவர் மே. வி. வேணுகோபால் அ. க. தங்கவேலர் முதலியவர்கள் பேசினார்கள். 15, 16 கழகங்களின் சார்பில் வாழ்த்துத் தாள்கள் வாசித்தளிக்கப் பட்டன. வாழ்த்துத் தந்திகள் பல வந்திருந்தன. மாநாடு போல் மக்கள் வந்திருந்தது சீர்திருத்த மணமுறையை மக்கள் எவ்வளவு தூரம் ஆதரிக்கிறார்கள் என்பதை விளக்கும்.

---

"பெரிய எண்ணங்கள் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வரப்பட்டால் பெரிய காரியங்களாகின்றன.

ஹேஸ்லிட்.

1-ம் பக்கம் தொடர்ச்சி

சாதி வித்தியாசங்கள் வந்த பிறகே இந்தியாவிற்குச் சனியன் பிடித்தது. இதுவே இத்தேசத்திற்கு ஓர் சாபமாகும். இதைவிட அடிமை நாடு வேறொன்றிருக்கிறதா?"

என்று கூறியிருக்கிறார்.

இதிலிருந்து தாழ்த்தப்பட்டோர் கல்வி, பொருளாதாரம் ஆகியத் துறைகளில் முன்னேற்ற மடையவேண்டுமென்பது நன்கு விளங்கும். இதற்கு, இன்றுள்ள நிலையில், இந்துக்களை நம்பியிருந்தால் முன்னேற்ற மடைய முடியுமா?

தனி சமூகமாக, தனித்து நின்று தங்கள் உரிமைகளைப்பெற பாடுபடவேண்டும். இதற்கு இன்று, **டாக்டர் அம்பேத்கார்** அவர்களைவிட சிறந்த தலைவரை அவர்கள் பெறமுடியாது. அவருடைய தலைமையில் இச் சமூகத்தார் ஒன்று திரண்டு கட்டுப்பாட்டுடன் பாடுபட முன் வரவில்லையென்றால் என்றென்றும் தலையெடுக்க முடியாது. டாக்டர் அம்பேத்கார் அவர்கள் தகுந்த தலைவரா என்பதை கீழ்காணும் பரீட்சையிலிருந்து தெரிந்துகொள்ளலாம். அதாவது,

தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் விடுதலைக்கு உண்மையாகப் பாடுபடுபவர் அச்சமூகத்தைத் தாழ்த்தி வைத்து வைத்திருக்கும் கூட்டத்தினரால் கட்டாயமாக எதிர்க்கப்படுவார்கள்; தூஷிக்கப்படுவார்கள்; பலவிதமான பழிகளுக்கு ஆளாக்கப்படுவார்கள் என்பது நிச்சயம்.

ஆகலால், தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் பரம்பரை விரோதிகளாகிய உயர்ந்த சமூகத்தினரால் "தேசத்துரோகி"யென்றும், "சமூகத்துரோகி" "தேசாபிமானம் இல்லாதவன்" என்றும் தூற்றப்படுகின்றவர்கள் யாரோ அவர்களே அச் சமூகத்திற்கும், சுதந்திரத்திற்கும் பாடுபடுகின்றவர்கள் என்பதின் மூலமாகத் தெரிந்துகொள்ளலாம்.

இத்தகைய பரீட்சையில் தேறி நிற்பவர்தான் ஒப்பற்றத் தலைவர் **டாக்டர் அம்பேத்கார்** அவர்கள்.

இவருடைய தலைமையில் தாழ்த்தப்பட்டோர் ஒன்றுபட்டு கட்டுப்பாட்டுடன் போராட வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். இப்பொழுது, அவர் ஒரு புது கிளர்ச்சியைத் துவக்கியிருக்கிறார்.

தாழ்த்தப்பட்ட மக்கள் கூட்டுத் தொகுதியின் மூலமாக சட்டசபைகளுக்குத் தெரிந்தெடுக்கப்படும் முறையாகிய பூனா ஒப்பந்தத்தை ரத்து செய்யவேண்டும், தனித்தொகுதி முறை வேண்டும் என்றும்,

ஷெடியூல்டு வகுப்பார் கலனைக் குறித்து காங்கிரஸ் கொண்டுள்ள திட்டம் என்ன என்பதை விளக்க வேண்டும் என்றும்,

இடைக்கால சர்க்காரில், தாழ்த்தப்பட்டோருக்கு ஒரு ஸ்தானம் மட்டும் கொடுத்திருப்பதைக் கண்டித்தும், கிளர்ச்சி துவக்கியிருக்கிறார்.

பம்பாய், பூனா ஆகிய இடங்களில் சட்டசபைகளுக்கு முன் சத்தியாக்கிரகம் செய்த நூற்றுக் கணக்கான ஆண் பெண் முதலியவர்களை சிறை பிடித்து காவலில் வைத்து தண்டித்தும் அபராதம் விதித்தும் வந்தார்கள். இப்பொழுது நாகபுரியில் நூற்றுக்கணக்கில் சத்தியாக்கிரகம் செய்து வருகின்றனர். இவர்களையும் கைது செய்து காவலில் வைத்து விடுதலை செய்து வருகின்றனர். இவர்களுடைய கிளர்ச்சியை போராட்டத்தை காங்கிரஸ் ஜாதி இந்துக்கள் தங்களுடைய பிரச்சார பலத்தினாலும் பத்திரிகை பலத்தினாலும் இருட்டடிப்பு செய்து வருகின்றார்கள்.

இந்தச் சமயத்தில் தாழ்த்தப்பட்டோர் ஒன்றுபட்டு தங்களின் உண்மையான தலைவரைத் தெரிந்துகொண்டு அவரது கட்டளையின்படி ஒரே கொடியின் கீழ் நின்றால் விடுதலையடையலாம் சுதந்திரம் பெறலாம்; இல்லையேல் இன்றிருப்பதைவிட மோசமான அடிமை வாழ்வை யடைவார்கள் என்பது உறுதி.

எனவே, தாழ்த்தப்பட்ட மக்களே! எழுங்கள்! ஒப்பற்ற தலைவர் டாக்டர் அம்பேத்கார் தலைமையில் திரண்டு வாருங்கள்! என்று அழைக்கின்றோம்.

பார்வையிட்டோம்:

## பால்யன் ஆண்டுமலர்

காரைக்காலிலிருந்து தோழர் உ. அ. ஹனிபா அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளிவரும் "பால்யன்" என்ற முஸ்லிம் வாரத் தாளின் ஆண்டுமலர் ஒன்று நமது பார்வைக்குவந்தது. கண்டு மகிழ்ந்தோம்.

'பால்யன்' பெயரளவிலே பால்யனே யல்லாது கருத்துக்கள் முதிர்ந்தவைகள், செய்கைகள் சிறந்தவைகள்; நோக்கம் மேலானது; உறுதி தளராதது. இவை யத்தனையும் இவ்வாண்டு மலரில் காணக்கிடைப்பதை யறியலாம்.

சமூக சீர்திருத்தம், பெண்ணுரிமை, காதல் மணம், விதவை மணம் முதலிய மணங்கள் இம் மலரிலே விசுவதை அறியலாம் ஒரு முறை இம்மலரை முகர்ந்து பார்த்தால். அதுமட்டுமா, அரசியல் இலட்சியம், இஸ்லாமிய கல்வியின் நோக்கம், இஸ்லாமிய மதத்தின் உண்மை முதலியவைகள் விளக்கும் இளம் எழுத்தாளர்களின் கடனத்தையும் கண்டு களிக்கலாம்.

காயிதே ஆஜம் M. A. ஜின்னா அவர்களின் அழகிய அட்டைப் படமும் முஸ்லிம் உலகில் உள்ள இளம் தமிழ் எழுத்தாளர்களின் உருவப் படங்களும இம்மலரில் சேர்க்கப்பட்டிருப்பது தனிச் சிறப்பையே அளிக்கிறது இம்மலருக்கு என்று கூறலாம்.

இன்றுள்ள காகித கஷ்டத்தில், அச்சகத்தாரின் தொல்லைகளுக்கிடையில் இவ்வளவு அருமையான அழகான மலரை முடித்து வெளியிட்டிருப்பது "பால்யன்" நிர்வாகிகளின ஊக்கத்தையும் உறுதியையும், ஆற்றலையும் விளக்கக் கூடியதாக வேயிருக்கிறது.

முஸ்லிம் சமுதாயம் விழிப்புறவும், திராவிட மக்கள் இஸ்லாத்தின் உண்மையை யுணரவும், முஸ்லிம் மக்களுடன் பரஸ்பரமாகப் பழகி வாழவும், பகைமைத் தீமூண்டெழுகிற இக் நாளில இத்தகைய மலர்கள் பெரிதும் துணை புரியும் என்றே நம்பிகின்றோம். எனவே இம்மலரை முஸ்லிம்களும் திராவிடர்களும் ஆதரிக்கத் தவறமாட்டார்கள் என்றே கருதுகின்றோம்.

முஸ்லிம் லீக்

காரைக்காலிலிருந்து தோழர் A. M. யூசுப் அவர்களை ஆசிரியராகக்கொண்டு திங்கட்கிழமை தோறும் வெளிவரும் இஸ்லாமிய சமுதாய வாரத்தாள்.

முஸ்லிம் மக்களின் அரசியல் அறிவு வளர்ச்சிக்கு இத்தாள் பேருதவியாக யிருக்கும் என்று நம்புகிறோம். ஒரு சமுதாயத்தை விழிப்புறச் செய்வதும் தன்மானத்துடன் வாழச் செய்வதும் அரிய நூற்களும் தாள்களும் என்பதை மறுக்க முடியாது. எனவே இத்தகைய தாள்கள் இப்பொழுது முஸ்லிம் சமுதாயத்தில் பெருகிக்கொண்டு வருவதைக்கொண்டு நாம் உள்ளபடி மகிழ்கின்றோம்.

வாழ்க முஸ்லிம் லீக்!

தனி இதழ் விலை 0—1—6

கிடைக்குமிடம் முஸ்லிம் லீக்,
காரைக்கால்.

கலப்புமணக் காதலர்
தெம்பாங்கு

திண்டுக்கல் தோழர் M. R. மித்திரன் அவர்களால் இயற்றப்பட்டது. தோழர் மித்திரன் அவர்களை தமிழ் நாட்டில் அதுவும் சுயமரியாதை உலகில் அறியாதார் யாரும் இருக்கமாட்டார்கள். சுயமரியாதைக் கொள்கையை சாதாரண கிராமத்தில் வாழ்வோரும் எளிதில் புரிந்து கொள்ளுமாறு நவீன மெட்டுகளில் எழுதி விளக்குவதில் தோழர் மித்திரன் அவர்கள் குறிப்பிடத்தகுந்தவர் என்றே கூறலாம். அத்தகையவரால் எழுதப்பட்ட இத் தெம்மாங்கு புத்தகத்திற்கு மதிப்புரை தேவையில்லை யென்றே கருதுகின்றோம். ஆனாலும், புதியதாக, நமது கொள்கையை அறிய ஆவலுள்ளவர்களுக்கு, இப் புத்தகத்தைக் குறித்து நமது கருத்தை வெளியிடுவது சிறிது உதவியாக யிருக்கும் என்ற காரணத்தால் இது பற்றி எழுதமுன் வந்தோம்.

இச் சிறு புத்தகத்தில் வள்ளிக்கும் பொன்னனுக்கும் கலப்பு மணத்தை முடித்துவைக்கிறார் நமது தோழர் மித்திரன். திருவையாறு வித்துவான் தோழர் நா. இராமசாமி செட்டியார் தீட்டியுள்ள மதிப்புரையில், "இத் தெம்மாங்கு மக்கள் யாவரும் மக்களாய் வாழ சாதி மதங்கள் தவிடு பொடியாக பெண்ணுரிமை மேயோங்க, கலப்பு மணம்பரவ, உயர்வு தாழ்வுகள் ஒடி யொழிய, சீரிய கருத்துக்களை யிடத்திற்கேற்ற உவமைகளா லெடுத்துக்காட்டி வலியுறுத்தி, திராவிடர்கள் ஓரினமென்பதையும் அவர்களின் சிறந்த பண்புகளையும் விளக்கி, படிப்பவர் நாவினிக்க, கேட்பவர் செவி மணக்க அமைத்திருக்கிறது" என்று குறிப்பிட்டிருப்பது உண்மையிலே மிக மிகப் பொருத்த முடையதாகும்.

"பிறப்புயர்வு தாழ்வு கொளா
பிரிவில் திராவிடர்கள்
சிறப்புறுங் குணஞ்செயலால்
தங்க
சேர்ந்து வாழ்நாடி தம்மா
பொன்னு"

என்றும்,

'உண்டு பண்ணுந் தொழிலாளர்
உழவு செய்யும் வேளாளர்
கொண்டு விற்கும் வாணிபரும்
தங்க
கூடிவாழ் நாடி தம்மா
பொன்னு"

என்றும் தீட்டியிருப்பதிலிருந்து நாட்டின் சிறப்பை எவ்வளவு அழகாக எடுத்துக்காட்டியிருக்கிறார் என்பது விளங்கும்.

அடுத்தபடியாக, ஆசிரியர் தமது கருத்தைத் தக்க உவமைகளால் விளக்கியிருப்பதும் பாராட்டக் கூடியதாகும்.

"உவகைக் கடல் குளித்தான்"

"ஒப்பிலா இன்ப முத்தம் கவலை கெடப் பெறுவதற்கே"

என்பன போன்ற பல உவமைகளைக் காணலாம்.

மற்றும், கலப்பு மணம் பெருக ஆண் மக்கள் மட்டும் ஆர்வத்தோடு முன்வந்தால் போதாது, பெண் மக்களும் முன்வரவேண்டும் என்பதையும், கதாநாயகி வள்ளியின் வாயிலாக விளக்கியிருப்பதையும் இங்கு யாவரும் கவனிக்கத் தகுந்ததாகும்.

இதன் தொடர்ச்சி 5ம் பக்கம்

Printed by M. Vedapuri Mudaliar at Sri Lakshmi Press 207, Bazar St., Tiruvettipuram. Edited, and Published by M. Kandaswamy, at 203, Bazar St., Tiruvettipuram. (N. A.)